Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 09 (22.12.2004) புதன்கிழமை இதழ்: 83




# யுத்த முனைப்பைக் கைவிட்டு உடன் பேச்சுக்கு திரும்புங்கள்!

## நோர்வே பிரதமர் அவசர வேண்டுகோள்



(ஒஸ்லோ)

இலங்கையில் அரசாங்கமும் – விடுதலைப் புலிகளும் மீண்டும் யுத்தத்துக்குச் செல்லாமல் பேச்சுக்களின் மூலம் தீர்வினை எட்டுவதற்கு முன்வரவேண்டும். இரண்டு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று நோர்வே பிரதமர் மக்னே பொண்டவிக் அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டே நோர்வே பிரதமர் பொண்டவிக் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே இவ்வாறு அவசர அழைப்பு விடுத்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமா தானப் பேச்சுக்கள் மிகவிரைவில் ஆரம்பிக்கப் படல்வேண்டும். மிக முக்கியமான விடயம் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை உரிய முறையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரியில் மீண்டும் சொல்ஹெய்ம் வருவார்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைக்காக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் அடுத்த மாதம் கொழும்புக்கு வரவிருப்பதாக தெரியவருகிறது.

அண்மையில் ஐந்து நாள் விஜயமாக கொழும்பு வந்த சொல்ஹெய்ம் அரச அதிகாரிகளை சந்தித்த பின்னர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நியமனம் வழங்குவதாகக் கூறி

# கொழும்புக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு ஏமாற்றம்!

(கொழும்பு)

பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா நேற்று நியமனம் வழங்குவார் என அறிவிக்கப்பட்டு, நாடு முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்ட போதும் எவருக்கும் நியமனங்கள் வழங்கப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

அரச சேவையில் பட்டதாரிகளைச் சேர்க்கும் திட்டத்தின் அடிப்படையில் 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான நியமனங்கள் நேற்று கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகாவால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் இருந்து பட்டதாரி பயிற்சியாளர்கள் அனைவரையும் கொழும்புக்கு வருமாறும், போக்குவரத்து செலவு தவிர்ந்த ஏனைய செலவுகளை அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து ஆயிரக்கணக்கான பட்டதாரிப் பயிற்சியாளர்கள் நேற்று கொழும்புக்கு சென்றிருந்த போதும் - ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் மத்தியில் சுமார் அரை மணிநேர உரை நிகழ்த்திவிட்டு சென்றுவிட்டார்.

எவருக்கும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதனால் பட்டதாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரச எதிர்ப்புப் பேரணி கொழும்புக்குள் பிரவேசித்து மாபெரும் கூட்டம் நடைபெற்றதால் - அதை முறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்கள் குடாநாட்டுக்கு இரகசிய விஜயம்!

## பாதுகாப்பு நிலைகுறித்து ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க அரசாங்கத்தின் மூனறு முக்கிய இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்செய்து - இங்குள்ள தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து இரகசியமாக ஆராய்ந்து சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

அமெரிக்க அரசாங்கத்தின் மூன்று இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் கடந்த புதன்கிழமை யாழ்.குடா நாட்டுக்கு விஜயம் செய்தனர். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு மற்றும் இராணுவ ஆலோசகரான லெப்.கேணல் றிச்சர்ட் எஸ்.கிர்வென் தலைமையிலேயே இந்தக் குழுவினர் குடாநாட்டுக்கு வந்திருந்தனர்.



முகமாலை முன்னணி நிலைகளை பார்வையிடும் அமெரிக்க அதிகாரிகள்.

இவர்கள் இங்கு தங்கியிருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் போராட்டத்துக்கு வலிகாமமும் தயாராகிறது!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் யுத்தமுனைப்புக்களைக் கண்டித்தும் - விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கோரி, பெரும் எடுப்பிலான மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு வலிகாமம் பகுதி பொது அமைப்புக்கள் தயாராகிவருகின்றன.

மீள் குடியமர்வுக்கு அனுமதி வழங்குமாறு கோரியும், விவசாய நிலங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்த மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படவிருக்கிறது. இந்த மக்கள் போராட்டத்தை ஒழுங்குசெய்வது தொடர்பாக பொது அமைப்புக்கள் அடுத்த சில நாட்களில் கூடி ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கவுள்ளன.

ஏற்கனவே இதுபோன்ற போராட்டங்கள் தென்மராட்சியில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் புதிய யோசனையை புலிகளின் தலைமை ஆராய்கிறது!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(லண்டன்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஊடாக இலங்கை அரசாங்கம் அனுப்பியுள்ள புதிய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாக அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று 'தமிழ்நெற்' இணையத்தளத்திற்கு தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு வந்த சொல்ஹெய்ம் இங்கு பலதரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், நோர்வேக்குத் திரும்பும்வேளை அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றை விடுதலைப் புலிகளிடம் கையளிக்குமாறு கொடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் லண்டன் சென்ற சொல்ஹெய்ம் இந்தப் புதிய நிகழ்சித் திட்டத்தை அன்ரன் பாலசிங்கத்திடம் கையளித்தார்.

இது தொடர்பாக நேற்று 'தமிழ் நெற்றுக்கு' கருத்து தெரிவித்த அன்ரன் பாலசிங்கம் - சொல்ஹெய்ம் கையளித்த புதிய நிகழ்ச்சித் திட்டம் குறித்து நான் எதுவும் தெரிவிக்கமாட்டேன். இந்த திட்டத்தை தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைத்துள்ளேன்.

இந்த புதிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக தலைமைப்பீடம் தனது முடிவை அறிவிப்பதற்கு முன்னர் தற்போது அது தொடர்பாக கவனமாக ஆராய்ந்து வருவதாக தெரிவித்த அவர், அரசின் புதிய திட்டம் தொடர்பாக புலிகள் எப்போது தமது முடிவை அறிவிப்பர் என்பதனை தெரிவிக்க மறுத்துவிட்டார்.

# இழுவைப் படகு மீன்பிடியை கைவிட்டோருக்கு உதவி!

யாழ். குடாநாட்டில் இழுவைப் படகுத்தொழில் மற்றும் சட்ட விரோத மீன்பிடிக் கருவிகளை முற்றாகத் தடைசெய்து, இத்தொழில்களுக்குப் பதிலாக வளிவலைத் தொழில் செய்வதற்குரிய கடற்றொழில் உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக பிரதேசமட்ட சமாசங்களுக்கு முதற்கட்டமாக ரூபா தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து நாற்பதினாயிரம் பெறுமதியான காசோலைகளை அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அரசாங்க செயலகத்தில் வைத்து இன்று மாலை 3 மணிக்கு வழங்கவுள்ளார்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 45 பயனாளிகளுக்கு ரூபா 54 இலட்சம் ரூபாவும் -

யாழ்ப்பாணம் பிரதேசமட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச 34 பயனாளிகளுக்கு ரூபா முப்பது இலட்சத்து அறுபதினாயிரமும் -

வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச 2 பயனாளிகளுக்கு ரூபா 3 இலட்சத்து எண்பதினாயிரமும்-

ஊர்காவற்றுறை எழுவைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க 3 பயனாளிகளுக்கு ரூபா 5 இலட்சத்து எழுபதினாயிரமும் -

வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச 2 பயனாளிகளுக்கு ரூபா 3 இலட்சத்து எண்பதினாயிரமுமாக ரூபா 99 இலட்சத்து நாற்பதினாயிரம் காசோலை மூலம் சமாச பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

இந்த நிகழ்வில் சமாச சம்மேளனப் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரத்தினம் அழைப்பு விடுத்துள்ளார். (21)

## கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வடக்குப் பகுதி மக்களின் உதவும் பயணம்!

### பொருட்கள் சேகரிக்கும் பணி இன்று ஆரம்பம்

கிழக்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வெள்ள நிவாரணப் பொருட்களை இன்று யாழ். குடாநாட்டில் சேகரிக்கவுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையானது கிழக்கில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட ரீதியாகவும், வலய ரீதியாகவும், கோட்டரீதியாகவும் ஊரகங்கள் ரீதியாகவும் வெள்ள நிவாரணப் பொருட்களை சேகரித்து அங்கு சென்று வழங்கவுள்ளது.

இதன் அடிப்படையில் தேசிய எழுச்சிப் பேரவை அங்கத்தவர்கள் அனைவரும் தமது பகுதி மக்களிடம் வெள்ள நிவாரணப் பொருட்களை சேகரிக்குமாறும், இதற்கு மக்கள் தமது பூரண ஆதரவை வழங்குமாறும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சூ. சிறில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, குடாநாட்டின் அனைத்து சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் தத்தமது சனசமூக நிலையங்களை தமது பகுதிக்கான சேகரிப்புமையமாக ஏற்பாடு செய்து சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆலயங்கள், தேவாலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச, தனியார், உள்ளூராட்சி பணிமனைகளும் பொருட்களை சேகரிக்குமாறு ஒருங்கிணைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் இன்று கிளிநொச்சியில் திறப்பு!

கடந்த 25 வருடங்களாக மூடப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை இன்று காலை 10 மணிக்கு வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி என்.ஜெயரட்ணம் திறந்து வைக்கவுள்ளார்.

1970 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் 1979 ஆம் ஆண்டு மூடப்பட்டு, வவுனியா பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது. இதனால் கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அலுவலக ஊழியர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். மீண்டும் இன்று திறக்கப்படும் கிளிநொச்சி பிரதேச அஞ்சல் அலுவலக அத்தியட்சகர் அலுவலகம் மூலம், இப்பிரதேச மக்கள் பயன்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (21)

## சிறுவன் படுகாயம்

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும எதிரெதிரே மோதிக்கொண்டதால் 14 வயது சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் நெல்லியடி கிழக்கு முடக்காடு கரவெட்டியைச் சேர்ந்த அன்ரனி யோகானந்த், அன்ரனி ரெக்ஸ் (வயது 14) என்ற சிறுவர்களே மந்திகை வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (12)

# தொழிற்பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன!




பற்றீசியன் தொழில்பயிற்சி நிறுவனத்தில் தொழில் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் அகவொளி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

எஸ்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக ஜெ.பி.செல்வராஜா, பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் கி.ஜெயக்குமார், அகவொளி இயக்குநர் எஸ். எ.இராஜநாயகம், பற்றீசியன் பதிவாளர் ஜி.ஜெ.தனசிங்கம், ஐ.எல். ஓ.நிறுவன அதிகாரியும் கலந்து சிறப்புவரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதன்பின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மாணவர்களினால் உருவாக்கப்பட்ட ஆடைகள், அலங்காரப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.

# குடாநாட்டு நிலைமைகள் குறித்து யாழ்.செயலகத்தில் இன்று மாநாடு

யாழ்.மாவட்ட தற்போதைய நிலை தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர், திட்டப் பணிப்பாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டு யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எவ்வகையில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். இந்தச் சந்திப்பில் பத்திரிகையாளர்கள் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி 2005 ஆம் ஆண்டு கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து புகுமுக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் 1 ஆம் வருட பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

(குளிரூட்டப்பட்டது)

விக்ரம், கிரன், மனோரமா நடித்த

ஜெமினி

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும் (பு.நே)

தினசரி இரவு 6.30, 9.00 (பு.நே) மட்டும்

THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்

ராஜா யாழ்ப்பாணம்.

சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

சத்ரபதி

(ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. மட்டும்

நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த

அழகிய தீயே

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

URASSIC PARK - 3

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடின் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்


## மோட்டார் திணைக்கள பணிகள் ஜனவரி 3 வரை ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக மோட்டார் போககுவரத்து திணைக்கள - வருட இறுதிச் செயற்பாடுகள் நடைபெறுவதனால் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் பொதுமக்கள் தொடர்புகொள்ள முடியாதென மோட்டார் போககுவரத்து உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வருட இறுதிச் செயற்பாடுகள் முடிவடைந்தும் அடுத்த வருடம் ஜனவரி 3 ஆம் திகதி முதல் தம்முடன் தொடர்புகொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நியாப் உபகுழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் நியாப் நிறுவனத்தின் உபகுழுக்கூட்டம் நாளை யாழ. செயலகத்தில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நியாப் இரண்டு தொடர்பாடு அடுத்தகட்ட செயற்திட்டங்கள் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன. எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கலந்துகொள்ளுமாறு யாழ்.செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

## அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம்!

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு வைத்திய அதிகாரி எஸ்.சண்முகதாஸ் தலைமையில் வைத்தியசாலை அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

அன்றையதினம் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெறவிருக்கிறது. (21)


இந்த மண்ணில் போலிகளா...?

எச்சரிக்கை! எச்சரிக்கை!

☆ ஏமாற்றுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

☆ நாங்கள் உங்களுக்குத் தருவது

அசல் கோயோ ரேசர்களே

பயன் பெறும் உங்களுக்கு இதன் பெருமை புரிந்திருக்கும்

☆ இம்மண்ணிலும் போலிகளா எம்மையும் ஏமாற்றுகிறீர்களா?

☆ ஜப்பான் ஒரிஜினல் கோயோ ரேசருக்கு பதிலாக போலி ரேசருக்கு ஒறிஜினல் கோயோ றேசரின் குறியீட்டை சட்டவிரோதமாக பயன்படுத்தி போலிகளை ஒரிஜினல் என்று பாவனையாளர்களை ஏமாற்றி கொழுத்த இலாபம் பெறும் நோக்கில் ரேசர்களை விற்கும் சில வியாபாரிகளைப் பற்றி நாம் அறிய வந்துள்ளோம். இதனைப் பற்றி பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

☆ ஐயா! போலி ரேசர் அல்லது நல்ல ஒறிஜினல் தனித்துவமான கோயோ ரேசர் பொருத்துவதற்கும் செலவு ஒன்று தான். ஆனால் போலி ரேசர்களின் பாவனையோ குறைந்த காலம். நல்ல ரேசரின் பாவனையோ நீண்டகாலம். இதில் எதை தெரிவு செய்வது என்பது பாவனையாளர்களாகிய உங்களின் கடமையே?

☆ நாம் இதனை உரிய அதிகாரிகளுடன் சேர்ந்து தகுந்த சட்டநடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம் என்பதை உறுதி கூறுகின்றோம்.

வார்ப்பிலேயே பார்த்து வாங்குங்கள் கோயோ

Koyo®

நீண்ட பாவனைக்கும், நீடித்த உழைப்பிற்கும், உத்தரவாதம் அளிப்பது

எங்கள் Koyo® ரேசர்களே!

(C/3503)

தொலைபேசி எண்: 011 2341580 - 1, 011 2438779

தொலை நகல்: 011 2454608

செரெண்டிப் மோட்டர் என்ரபிறைசஸ் (PVT) லிமிட்

இல.60 B ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜனாதிபதி - ஜே.வி.பி இடையே பேச்சு

## ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறும்



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த மாதம் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு தடையாக இருக்கும் காரணிகள் குறித்து ஜே.வி.பியுடனான இந்தப் பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பாகக் கூட்டணிக் கட்சிகள் மத்தியில் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், சமாதான முயற்சிகள் தொடர்பான ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும் என உறுதி அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில், பேச்சு நடத்துவதால் ஏற்படும் பாதிப்புகளாக ஜே.வி.பி. கருதும் விடயங்கள் எவை என்பது குறித்தும், அவற்றுக்குரிய மாற்று தீர்வுகள் குறித்தும் ஜே.வி.பியுடன் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே), (01)

# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு 2500 ரூபா விசேட கொடுப்பனவு!

(கொழும்பு)

மிகவும் கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 2500 ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்குவதற்கு, கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவர்களுக்குத் தொடர்மாடி வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும் கல்வி அமைச்சு திட்டம் ஒன்றை வரைந்துள்ளது. இந்த வீட்டுத்திட்டம் கடைத் தொகுதிகள், சுகாதார மத்திய நிலையம், பொழுதுபோக்கு அமைவுகள் கொண்ட வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

அடுத்த ஆண்டு இந்தத் திட்டம் வடமத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# தென் பகுதியைக் கலக்கிய காய்ச்சல் இனம் காணப்பட்டது!

மாத்தறை மற்றும் எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் உயிரிழப்புக்களை ஏற்படுத்திய மர்மநோய் இனங்காணப்பட்டுள்ளது. இந்த நோய் புளுவன்ஸா ஏ,புளுவன்ஸா பி என இனங்காணப்பட்டுள்ளது.

அரசாங்க மருத்துவ ஆய்வு மையம் இதனைக் கண்டறிந்துள்ளது. இதனையடுத்து, இந்த நோயை மருந்துகள் மூலம் குணப்படுத்தலாமென, மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். இந்த நோயின் காரணமாக கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் சுமார் 9 பேர் பலியாகினர்.

இதேவேளை நேற்று முன்தினம் இதுதொடர்பாகச் சுகாதார அமைச்சு ஊடக மாநாட்டை நடத்தியது. இதன்போது இந்த நோய் தொடர்பாக அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக வைத்தியரை நாடுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# புலிகளுக்கு நோர்வே நேரடி உதவி; ஹெல உறுமய விளக்கம் கோருகிறது

(கொழும்பு)

நோர்வே ஏற்பாட்டாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நேரடியாக உதவி அளிப்பது தொடர்பாக, இலங்கை மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று ஜாதிக ஹலஉறுமய கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலிக் கருவிகளை தருவித்தமை, மற்றும் நிதி உதவி போன்ற குற்றச் சாட்டுக்கள் கடந்த 18 ஆம் திகதி நோர்வேயின் அமைப்பு ஒன்றினால் வெளிக்கொணரப்பட்ட அடிப்படையிலேயே இதனைக் கோரியதாக அத்துரலிய ரத்ன தேரர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

# பிறமாவட்ட நாடக கலைஞர்கள் கொழும்பில் தங்குவதற்கு இடவசதி

## கலாசார அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பில் நாடகக் கலைஞர்களுக்கு இலவசமாகத் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு கலாசார அமைச்சு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பிற இடங்களிலிருந்து கொழும்புக்குச் செல்லும் நாடகக் கலைஞர்கள் இரவு நேரங்களில் போக்குவரத்து வசதியின்மையால், பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். நாடகக் கலைஞர்களது இந்தப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் விஜித ஹேரத்திடம் விளக்கி கூறப்பட்டதையடுத்து, அவர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

அமைச்சுக்குச் சொந்தமான ஜோன். டீ. சில்வா அரங்கிற்குப் பினனாலுள்ள இடத்தில் தற்காலிகமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாடகக் கலைஞர்கள் தங்குவதற்கு நிரந்தரக்கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும், அவர் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற 2004 ஆம் ஆண்டுக்கான தேசிய நாடக விழாவில உரையாற்றியபோதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

விருதுகளுக்காக மட்டும் நாடகங்களைத் தயாரிக்காமல் சிறந்த கருத்துக்களை சமூகத்துக்கு வழங்குவதற்கும், நாடகக் கலைஞர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, இலங்கையில் சிங்கள, தமிழ் மூத்த கலைஞர்கள் இருவருக்கு ஐம்பதாயிரம் ரூபா பணமும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

வரலாற்றில் முதற்தடவையாக சிங்களக் கலைஞருக்கு வழங்கப்பட்ட அதே பரிசு, இந்தமுறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த நாடகக் கலைஞரான நவாலியூரான் என அழைக்கப்படும் நா.செல்லத்துரைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தே)

# இலங்கையிலுள்ள மருந்தகங்களில் பெரும்பாலானவை சட்டவிரோதமானவை

இலங்கையில் செயற்பட்டுவரும் சுமார் 4 ஆயிரம் மருந்தகங்களில்- 3 ஆயிரத்துக்கும் அதிகமானவை சட்டவிரோதமானவை எனக் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட இலங்கை மருந்தாளர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் துலே டி சில்வா தெரிவித்தார்.

நாட்டில் செயற்படும் சட்டவிரோதமான மருந்தகங்கள் மற்றும் உரிய தகைமை பொறாத மருந்தாளர்கள் தொடர்பாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள சட்டத்தில் ஒவ்வொரு மருந்தகத்திலும் அனுமதி பெற்ற மருந்தாளரின் புகைப்படம் தாங்கிய அனுமதிப்பத்திரம் மற்றும் மருந்தக அனுமதிப்பத்திரம் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடைமுறைப்படுத்துவதில்லை.

சட்டவிரோத மருந்தகங்கள் மற்றும் மருந்தாளர்களால் நோயாளர்கள் பாதிப்படைவதாகவும், மருந்துகளைக் கொள்வனவு செய்வோர் உரிய அனுமதி பெற்ற மருந்தகங்களை அடையாளம் கண்டு அவற்றில் மட்டுமே மருந்துவகைகளைக் கொள்வனவு செய்யவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (01)

# பாதாள உலக குழுவுடன் தொடர்பு! பொலிஸ் அதிகாரிகள்மீது விசாரணை

முக்கிய பாதாள உலகக் குழுக்களுடனும், போதைப் பொருள் கடத்தல்காரர்களுடனும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகள் 22 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த அதிகாரிகளுக்கும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த உறுதியான ஆதாரங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகத் தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (தே), (01)

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை

## அமெரிக்க தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலற்றுப் போவதற்கு வாய்ப்புகள் இல்லையென, அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை மிகுந்தபுரத்தில் அமைந்துள்ள தொழிலநுட்பக் கல்லூரியில் 12 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை அமெரிக்க தூதுவராலயத்தின் பிரதித் தலைமை அதிகாரி ஜேம்ஸ் எப் என்ரிவைஸ்ற்ல் சம்பிரதாய பூர்வமாக நேற்றுக் காலை நாட்டினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொணடு உரைநிகழ்த்திய அமெரிக்க இராஜதந்திரி - இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலற்றுப் போய்விடும் என்று எவரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குரிய அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும்.

அமெரிக்க உதவி நிறுவனத்தால் 870 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் திருகோணமலை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு 55 உதவி வழங்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (01)

# அடிப்படை உரிமைச் சட்டங்களில் இதுவரை மாற்றங்கள் செய்யவில்லை

## மனித உரிமை கருத்தரங்கில் நீதிபதி இளஞ்செழியன்

1977 ஆம் ஆண்டு ஐ.நாவால் அமுல்படுத்தப்பட்ட சட்டத்தை இலங்கை அரசாங்கம் 1997 ஆம் ஆண்டு அங்கு போய் கையொப்பமிட்டு விட்டு வந்துவிட்டது. ஆனால் இன்று வரை அமெரிக்கா, இந்திய போன்ற ஜனநாயக வல்லரசு நாடுகளே கையொப்பமிடவில்லை.

ஜெனிவா மனித உரிமைகள் முன்னாள் நிறுத்தி, உரிஞ்சு போடுவாங்கள் என்று பயப்படுகிறார்கள். அதனால், கையொப்பம் போடவில்லை. ஆனால், இலங்கையில் இருந்து போய், கையொப்பம் போட்டு விட்டு வந்துவிட்டார்கள். அதன் ஆத்தம் என்ன, இலங்கையின் உசச நீதிமன்றத்தின் வழக்கை எதிர்த்து, ஜெனிவாவின் ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் ஆணைக குழுவுக்கு முறையிடலாம். இது ஒரு சாதாரண சட்டமில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தையே எமது இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொணடுள்ளது. ஆனால் இதுவரை எத்தனை வழக்குகள் ஜெனிவா சென்றுள்ளன. எத்தனை தமிழ்மக்களுடைய வழக்குகள் அங்கு சென்றுள்ளன. இன்றுவரை இல்லை என்பது தான் உண்மை.

என வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதஉரிமைகள் கற்கை பிரிவால் வவுனியா ரோஸ்கார்டன் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

இலங்கையின் அரசியல் அமைப்பு சட்டம் தாபிக்கப்பட்டது 1978 ஆம் ஆணடு. இந்த 78 ஆண்டுக்கு பின்னரே அனைத்து மாநாட்டு உடன்படிக்கைகளையும் இலங்கை அரசாங்கம், ஐ.நாவின் சட்டங்கள் அனைத்தையும் ஏற்று, கையொப்பம் இட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் சட்டத்தில் பிரிவுகள் இன்று வரை மாற்றம் செய்யவில்லை. ஐ.நாவுக்குப்போய், 1980, 1981 ஆம் ஆண்டில் குடியியல், சிவிலியல் சட்டம், பொருளாதார கலாசார சமூக உரிமைகள் சட்டத்தை ஏற்றுக் கொள்வோம் எனக் கையை உயர்த்திவிட்டு சர்வ தேசிய ரீதியாகத் தனது புகழ்ச்சியை உயர்த்தி போட்டு வந்த இலங்கை அரசாங்கம், அதிலுள்ள ஒரு பிரிவைக் கூடத் திருத்தம் செய்து, 1978 ஆம் ஆண்டிலுள்ள அரசியல் அமைப்பு சட்டத்தில் எந்த மாற்றத்தையும் செய்யவுமில்லை, பிரகடனப்படுத்தவும் இல்லை.

சர்வதேசப் பார்வையில் ஒரு குணம், உள்நாட்டில் ஒரு குணம் இங்கே காணப்படுகிறது. ஐ.நாவில் கையொப்பம் இட்ட ஒரு மாநாட்டு உடின்படிக்கை இலங்கையில் உடனடியாக அமுல்படுத்தப்படமாட்டாது. நாங்கள் பொது நலவாய நாடுகள். இந்தக் குறிக்கப்பட்ட சட்டத்தை இலங்கை நாடாளுமன்றத்தினூடாக நிறைவேற்ற வேண்டும். அப்படி இதுவரை 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 19 திருத்த சட்டங்கள் வந்துள்ளது. ஆனால், இதுவரை ஒரு அடிப்படை உரிமைச் சட்டமும் அமுலுக்கு வரவில்லை. ஆனால் 1980 ஆம் ஆண்டுக்கு பின்னரே இலங்கை அரசாங்கம் குடியியல் சட்டம், கலாசார உரிமைகள் சட்டம், சித்திரவதைகள் சட்டங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால், சித்திரவதைகள் சட்டத்தில் ஒரு சின்ன வேறுபாடு 1993 ஆம் ஆண்டு ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை - சித்திரவதைகள் சட்டத்தை ஏற்று கொள்ளப்பட்டு, 1997 ஆம் ஆண்டு சித்திரவதைகள் சட்டம் நாடாளுமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரே ஒரு சட்டம் தான். அன்று ஐ.நாவில் கையுயர்த்தி, இலங்கையில் வந்து சட்டமாக்கப்பட்ட ஒரேயொரு சட்டமாகும் எனத் தெரிவித்தார்.

# 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து தென்னாபிரிக்க அணியை வென்றது!





(போர்ட் எலிசபெத்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றதன் மூலம் - இங்கிலாந்து அணி தொடர்ந்து எட்டு டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற டெஸ்ட போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 337 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 425 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் இரண்டாம் இனிங்ஸை தொடக்கிய தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்றது. கப்டன் ஸ்மித் மற்றும் கலிஸ் இணைந்து விவேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவர்கள் மூன்றாவது விக்கெட்டுக்கு 88 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

அப்போது பிளின்ரொப் வீசிய பவுன்சரை தவறாகக் கணித்த ஸ்மித் 'ஹுூக் ஷொட்' அடித்தார். பந்து உயரே பறக்க எல்லைக் கோட்டில் இருந்து ஓடிவந்த சைமன் ஜோன்ஸ 'டைவ்' அடித்து அற்புதமாக பிடியெடுத்தார். இதனால் ஸ்மித் 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டிப்பென்னர் 10 ஓட்டங்களுக்கு கைல்ஸ் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இதற்குப் பின் சைமன் ஜோன்ஸ் வேகத்தில் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்ந்தன. இவரது பந்துவீச்சில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கலிஸ் 61, பொலக் 0, சோலேகிலி 0, என்ரினி 4 ஓட்டங்களுக்கு வெளியேறினர்.

டி புரூன் 19 ஓட்டங்களுக்கு பிளின்ரொப் பந்தில் ஆட்டமிழந்தார். இறுதியில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸில் 229 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம் இங்கிலாந்து அணிக்கு வெறும் 142 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இங்கிலாந்து தரப்பில் அபாரமாக பந்து





வீசிய சைமன் ஜோன்ஸ் 39 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பிளின்ரொப், கைல்ஸ் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து தொடக்கத்தில் திணறியது. பொலக்கின் முதல் பந்தில் ட்ரெஸ்கொதிக் 'டக்' அவுட்டானார்.

என்ரினி வேகத்தில் புட்சரும் 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி தந்தார். கப்டன் மைக்கல் வோகன் 15 ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

இதற்குப் பின் ஸ்ரரஸ், தோர்ப் இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் நான்காவது விக்கெட்டுக்கு 43 ஓட்டங்களைச் சேர்த்தனர். போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் முன்னதாகவே நிறுத்தப்பட்டது. அப்போது இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முதல் இனிங்ஸில் சதம் அடித்த ஸ்ரரஸ் 51, தோர்ப் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக்காலை 49 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் இங்கிலாந்து ஆட்டத்தைத் தொடங்கியது.

ஆட்டமிழக்காமல் இருந்த ஸ்ரரஸ் மற்றும் தோர்ப் ஆகியோர் இணைந்து 35 நிமிடங்களில் அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தனர்.

40.4 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தோர்ப் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், ஸ்ரரஸ் 134 பந்துகளில் 12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 94 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி தொடர்ந்து எட்டாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றது.

## சிறந்த உதைபந்து வீரராக றொனால்டினோ தெரிவு!



(சூரிச்)

2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த உதைபந்தாட்ட வீரராக பிரேசிலின் றொனால்டினோ சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டின் சிறந்த வீரரைத் தெரிவு செய்யும் போட்டியில் றொனால்டினோவுடன், தியரி ஹென்றி மற்றும் அன்ரி ஷெவ்ஷென்கோவ் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

சர்வதேச உதைபந்தாட்ட பயிற்சியாளர்கள் மற்றும் கப்டன்களின் வாக்குகளில் றொனால்டினோ 620 ஐயும், ஹென்றி 522 ஐயும், ஷெவ்சென்கோவ் 253 ஐயும் பெற்றனர்.

இந்த வாக்கெடுப்பில் கடந்த ஆண்டின் சிறந்த வீரராக தெரிவான ஷிடேன் நான்காவது இடத்தைப் பெற்றார். இவர் யூரோ - 2004 தொடரையடுத்து போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இந்த ஆண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீராங்கனையாக ஜேர்மனியின் பேகிற் பிறின்ஸ் தெரிவானார். அமெரிக்காவின் மியா ஹம், பிரேசிலின் மார்தா ஆகியோருடன் போட்டியிட்டு இவர் முதலிடத்தைப் பெற்றார்.

இதேவேளை 2004 இன் சிறந்த அணியாக பிரேசிலும், வளர்ந்து வரும் அணியாக சீனாவும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(டாக்கா)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. இதில் 2-0 என்ற முன்னிலையில் டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

இந்த நிலையில் ஒருநாள் தொடர் நாளை தொடங்கவுள்ளது. இதற்கான 14 பேர் கொண்ட பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டது.

இதில் முன்னாள் கப்டன் காலித் மஹ்மூட் அணியில் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக டெஸ்ட் தொடரில் விளையாடிய ஜுபைர் நீக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு



தாய்வானின் தலைநகர் தாய்பேயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐ.என்.ஜி தாய்பே சர்வதேச மரதன் - 2004 போட்டியில் 2 மணி 14 நிமிடங்கள் 5 செக்கன்களில் ஓடி முடித்து முதலிடத்தைப் பெற்ற கென்ய வீரர் வில்சன் செலால்.

# ஹர்பஜனின் பந்துவீச்சு குறித்து ஐ.சி.சியிடம் மீண்டும் புகார்!

ஹர்பஜன்சிங் பந்துவீச்சுக் குறித்து மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. இவரது 'தூஸ்ரா' முறையிலான பந்துவீச்சு தொடர்பாக சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறைப்படி புகார் செய்யப்பட்டுள்ளது.

சுழற்பந்து வீச்சாளர்களின் 'தூஸ்ரா' முறை குறித்து அவ்வப்போது சந்தேகம் தெரிவிக்கப்படும். இந்த வகையில் வீசும்போது, பந்தானது வலதுகை துடுப்பாட்ட வீரர்கள் அடிக்க முடியாதபடி அதிவிரைவாக சுழன்று செல்லும்.

இந்தப் பிரச்சினையில் சமீபத்தில் இலங்கையின் முரளிதரன் தடையைச் சந்திக்க நேரிட்டது. இப்போது இந்திய அணியின் ஹர்பஜன் சிக்கிக்கொண்டுள்ளார்.

சிட்டகொங் நகரில் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது ஹர்பஜன் பந்துவீச்சு குறித்து கண்காணிக்கப்பட்டது. இவர் 'தூஸ்ரா' முறையில் பந்துவீசும்போது கையை வளைக்கும் அளவு குறித்து நடுவர்களுக்கு சந்தேகம் எழுந்தது.

இதையடுத்து நடுவர்கள் அலீம் டார், மார்க் பென்சன், தொலைக்காட்சி நடுவர் மகபூர் ரஹ்மான், போட்டி நடுவர் கிறிஸ் பிராட் ஆகியோர் ஐ.சி.சிக்கு புகார் அளித்தனர்.

இதன்மூலம் இந்த ஆண்டில் சந்தேகத்துக்குரிய பந்துவீச்சில் சிக்கும் ஆறாவது வீரரானார் ஹர்பஜன்.

முன்னதாக பாகிஸ்தானின் ஷபீர் அகமட், சொகைப் மலிக், இலங்கையின் முரளிதரன், சிம்பாப்வேயின் மாவயர், பங்களாதேஷின் அப்துர் ரஸாக் ஆகியோர்மீது புகார் கூறப்பட்டது.

ஹர்பஜனைப் பொறுத்தவரை இரண்டாவது முறையாக பந்துவீச்சுப் பிரச்சினையில் சிக்குகிறார். இவர் முதல் முறையாக 1998 இல் சிக்கினார். பின்னர் இவரது பந்துவீச்சு பாணி திருத்தி அமைக்கப்பட்டது.

தற்போதைய பிரச்சினையில் உடனடி நடவடிக்கை எடுக்கும்படி இந்திய கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது பற்றி ஐ.சி.சி. தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது -

ஹர்பஜன் 'தூஸ்ரா' பந்துவீச்சு தொடர்பான புகார் கிடைத்தது. இதனைச் சரி செய்ய, சர்வதேச கிரிக்கெட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிபுணரை இந்திய கிரிக்கெட் சபை நியமிக்கவேண்டும்.

இவர் அடுத்த ஆறு வாரங்களுக்கு ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சுக் குறித்து ஆய்வு செய்வார். தவறு இருந்தால் எடுத்துக்கூறி திருத்துவார். பந்துவீச்சில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால், அது பற்றி ஐ.சி.சிக்கு அறிக்கை அளிக்கவேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டது.

'தூஸ்ரா' பிரச்சினை காரணமாக ஹர்பஜனுக்குத் தடை விதிக்கப்படமாட்டாது. இவர் சர்வதேசப் போட்டிகளில் வழக்கம்



போல் பங்கேற்கலாமென ஐ.சி.சி. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அடுத்த ஆறு வாரத்திற்குள் இது போன்ற புகாரில் மீண்டும் சிக்கி விடக்கூடாது. அப்படிச் சிக்கினால் ஹர்பஜன் மீது கடும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது.

உதாரணம் :
"கானந்திகழ் கதிரையில் நிகழெதிர் காலங்களினருள் செயுமுருகன் பள்ளினிசை பாடவே"
"மணி கொணர்ந்து மணிவிளக்கேற்றிடும்"
"மாணிக்கம் மள்ளிப் பீச்சை கொடுத்திடும்"

போர்த்துக்கேயர் காலத்தில் ஞானப்பள்ளு யேசு நாதரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, கத்தோலிக்க மதத்தைப் பிரசாரம் செய்து பாடப்பட்டது.

உதாரணம்:
"செங்கை மேவியகம்பு துளிர்த்த ஜெருசலை"
"முற்ற நீதியகலாதிறையின்ற ரோமாபுரி"
எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டலாம்.

*ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தே தோற்றம் பெற்ற புராணம் எனனும் இலக்கிய வடிவம் போர்த்துக்கேயர் காலத்திலும் தோற்றம் பெற்றது.*

ஆரியச் சக்கரவர்த்தி காலத்தே தட்சனகைலாய புராணத்தில் கோணேசர், மாதுமையின் சிறப்பு காணப்படுகின்றது. அதனைப் பின்பற்றி போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த ஞானாநந்த புராணம் கிறிஸ்தவ மதத்தை விளக்கமாகக் காணப்படுகிறது.

பாதகத்தை விட்டொதுங்கி பரபரனை நெஞ்சில் வைத்து, தீதற்று உலகர் கதி சேர்ந்தென்றும் வாழியவே என அர்ச்யாகப்பர் அம்மனையிலும் காணப்படுகிறது.

*கத்தோலிக்கப் புனிதத் தலங்களின் வர்ணனைகளைக் கொண்டிருத்தல*

"தேவலோகந் திறந்து முன் காட்டும் ஜெருசலைத் திருநாடெங்கள் நாடே" எனவும்
"ஊற்றுலாவு கருணை விளங்கும் ரோமாபுரி நாடெங்கள் நாடே" எனவும் ரோமாபுரிச் சிறப்பினைக் காணலாம்.

*நாட்டார் இலக்கிய வடிவங்களைக் கொண்டு விளங்குதல்.* மணிவாசகரால் பாடப்பட்ட அம்மானை வடிவப்பாடல் போர்த்துக்கேயர் காலத்தில் பேதுருப் புலவரால் அர்ச்யாகப்பர் அம்மானை பாடுதற்குப் பயன்படுத்தப்பட்டது. இது நாட்டார் இலக்கிய வடிவமாக அமைந்த இனிய ஓசையும், விழுமிய நடையும் உடையதாய் விளங்குகிறது.

### ஆரியச் சக்கரவர்த்திகள் காலமும் போர்த்துக்கேயர் காலமும் ஒப்புநோக்கு

* ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களாக சோதிடம், மருத்துவம், வரலாறு, சமயம் பள்ளு முதலானவை குறிப்பிடப்படுகின்றன. போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் கத்தோலிக்க மதத்தினை பிரசாரம் செய்கின்றன.
* ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் இந்து மதம் சார்ந்த தெய்வங்களான திருமால், சிவன், விநாயகர், முருகன், சரஸ்வதி முதலான தெய்வங்களைப் போற்றுகின்றன.

உதாரணம்:
சரசோதிமாலை : மருவெழுங்கமல மீது நடந்தருள் மகிமையான
செகராசசேகரமாலை : நாரணனைப் பயோடயினைத் தலைவா

* ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த தட்சணகைலாய புராணம், திருக்கரசைப் புராணம், கோணேசர் கல்வெட்டு என்பன ஆலய வரலாறு, இறைபெருமை கூறுவது போல போர்த்துக்கேயர் காலத்திலும் அர்ச்யாகப்பர் அம்மானை என்ற நூல் ஆலய வரலாறும், சதயேஸ் என்ற புனிதரையும் கூறுகிறது.
* மன்னர் புகழ்பாடும் தன்மை இருகாலங்களிலும் காணப்படுகிறது.

உதாரணம்:
போரன பாராரும் பிருத்துக்கால மறுவென்றன் என்ற பாடல் அடி.

* விருத்தப்பா, அகவல், சிந்து முதலிய யாப்பு வகைகள் இரு காலங்களில் தோற்றம் பெற்ற இலக்கியங்களிலும் வெளிப்படுகின்றன.
* ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் எழுந்த தழுவல் இலக்கிய ஆக்கங்கள் போர்த்துக்கேயர் காலத்திலும் தொடர்ந்து செல்கின்றன.

# ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்

* 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டு முற்பகுதிவரை (1216-1621)
* யாழ்ப்பாண அரசர்கள் இலக்கியத்திற்கு ஊக்குவிப்புச் செய்தனர். தமிழகத்திலிருந்து தமிழ் இலக்கியம், தமிழ்க்கல்வி தமிழ்ப்புலவர் பலரை வரவழைத்து, ஈழத்தின் பல பாகங்களில் குடியமர்த்தி வளர்ச்சிக்குத் தொண்டு செய்தனர். அரசர்கள் சிலர் தமிழ்ப்புலமை உடையோராகவும் காணப்பட்டனர்.
* நூல் நிலையம் அமைத்து தமிழகத்திலிருந்து நூல்கள் தருவித்து பயன்படுத்தப்பட்டன. சரஸ்வதி மண்டபம் என்பது நூல் நிலைய பெயர். இந்த நூல் நிலையம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலின் வடக்குப் புறமாக அமைந்திருந்தது என்றும் போர்த்துக்கேயர் காலத்தில் தீக்கிரையாகியது என்றும் கூறப்படுகிறது.
* இக்கால நூல்களை
    * சமயச் சார்புடைய இலக்கியங்கள்
    * வரலாற்று வரண்முறை கூறும் நூல்கள்
    * வைத்திய சோதிட நூல்கள்
    * காவியங்கள்

  என்ற பிரிவுகளாகப் பகுத்து நோக்கலாம்.

## சமயசார்பானவை

* திருக்கரசை புராணம் - ஈழத்து தேசியப்பண்பு கொண்டது. இதில் ஈழமக்கள் வாழ்க்கை முறை, மகாவலி கங்கையின் சிறப்பு போன்றவை இடம்பெறுகின்றது.
* தக்கிண கைலாச புராணம் - தேசியம் சமயம் சார்ந்தது. இப்புராணங்களை இயற்றியவர்கள் பற்றி கருத்து வேறுபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.
* கதிரை மலைப் பள்ளு - பொது மக்கள் வாழ்க்கை முறைமை இன்ப துன்ப உணர்வுகள் ஆகியவை புலப்படுத்தப் படுகின்றது.

## வரலாற்றுப் பண்பு

* கைலாசமாலை - முத்துராசகவிராஜா எழுதியது இதில் கைலாசநாதர் கோயில் வரலாறும். யாழ்ப்பாண அரசர் வரலாறும் காணப்படுகின்றது.
* வையாபாடல் - யாழ்ப்பாண மன்னர் வரலாறும், இலங்கையரசர் குலங்கள், குடிகள் வந்த முறைமையையும் எடுத்து விளக்குகின்றது.
* கல்வெட்டு - கோணேசர் கல்வெட்டு எழுந்தகாலம் பற்றி அறிஞர்கள் இடையே கருத்து முரண்பாடு. இது 5 ஆம் செகராசசேகரன் காலத்திற்குரியது எனக் கூறுப்படுகின்றது.

## வைத்திய சோதிட நூல்கள்

* வைத்தியம் - பரராச சேகரம்
  செகராச சேகரம் ஆகிய நூல்கள் கூறப்படுகின்றன.
* சோதிடம் - செகராசசேகர மாலை

இலக்கிய இலக்கண அறிவோடு அறிவியல்சார் துறைகளிலும், சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களையும் கல்வியாளராகக் கணித்து வைத்தியம், சோதிடம் ஆகியவற்றுக்கு முக்கியம் கொடுக்கப்பட்டது.

## காவியம்

* கண்ணகி வழக்குரை
  வாய்மொழி மரபுத் தன்மை காணப்படுகின்றது.

ஈழத்தில் இக்காலத்தின் விருத்தப்பா செல்வாக்குப் பெற்றது. மன்னர் புகழ் பாடும் பண்பும் இக்காலத்தில் காணப்படுகின்றது.

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2005

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

* முதலாம், இரண்டாம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. 

i) மரம் - கறி - தோட்டம்
ii) கொடி - தோட்டம் - கறி
iii) செடி - தோட்டம் - கறி

2. 

i) கொடி - கடை - உணவு
i) செடி - தோட்டம் - கறி
iii) மரம் - உணவு - தோட்டம்.

* கீழேயுள்ள படங்களைப் பார்த்து, இல 3 - 4 வினாக்களுக்குரிய விடையின் கீழ் கோடிடுக.




3. காட்டில் வாழும் விலங்குகள் எவை?
i) A,B ii) A,C iii) B,F iv) D,E

4. வீட்டில் வளரும் விலங்குகள் எவை?
i) A,C ii) B,D iii) B,E iv) F,B

* 5 ஆம் 6 ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுத் தொடர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றைக் காட்டுகின்றன. இவை சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வுகளை ஒழுங்கு வரிசைப்படுத்தும்போது, நடுவில் வரும் நிகழ்வுகளைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.

1. தசரதன் முதுமையடைந்துவிட்டதால், மூத்தமகன் இராமன் முடிசூட்டத் தீர்மானித்தான்.
2. சிறிய தாய் கைகேகியின் வேண்டுகோலுக்குப் பணிந்து, இராமன் காடுபோகிறான்.
3. கோசல நாட்டைத் தசரதன் அரசாண்டு வந்தான்.
4. தசரதனின் மனைவி கைகேகி தன் மகன் பரதன் நாடாள வேண்டுமென்று பிடிவாதமாக நின்றாள்.
5. அவனுக்கு இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன் என நான்கு மக்கள் இருந்தனர்.

i) 5 ii) 2 iii) 4 iv) 3

* இல 5- 7 வினாக்களுக்கு சரியான ஆங்கிலச் சொல்லின்கீழ்க் கீறிடுக.

5. தாய் - (Mthore, mohter, mother)
6. காய்கறி - (Vegatable, Vegetable, Vegeteble)
7. இருபது - (twenty, tewnty, tnwenty)

* இல 8- 10 உள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்களில் ஒன்று பிழையானது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

8. i) மாதம் ஒரு முறை வானத்தில் பௌர்ணமி நிலவைக் காணலாம்
ii) சதுரம் ஒன்றின் எதிர்ப் பக்கங்கள் மாத்திரம் ஒன்றுக்கொன்று சமனாகும்.
iii) மண்புழுக்கள் கமக்காரர்களுக்கு நன்மை பயக்கின்றன.
(..............)

9. i) பாடசாலை மாணவர்கள் வெள்ளைச் சீருடையுடன் அணிவகுத்துச் சென்றனர்.
ii) பாடசாலையில் ஆசிரியர்களிலும் பிள்ளைகள் குறைவு.
iii) பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பாடசாலைக் கீதம் ஒலிக்கப்படும்.
(..............)

10. i) அதிகாலையில் சூரியன் உதயமாகிறது.
ii) பறவைகள் மாலையில் உணவுதேடச் செல்கிறது.
iii) மாலையில் எல்லோரும் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்கின்றனர்.
(..............)

* இல 11-15 வினாக்களுக்கு சரியான விடையினை இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.

11. வீட்டு ஈக்கள்...................... முட்டைகளை இடுகின்றன.
(குப்பைகளில், தேங்கிநிற்கும் நீரில்)

12. மீன்கள் ...................... சுவாசிக்கின்றன.
(வாயினால், பூக்களினால்)

13. புதுவருடப்பிறப்பைத் தமிழர்களும்.................. கொண்டாடுவார்கள்
(சிங்களவர்களும், முஸ்லிம்களும்)

14. அலங்காரத்தையல்.................. ஒன்றாகும்.
(குறுக்குத் தையல், விஸ்பம்)

15. சூரியனுக்கு அண்மையிலுள்ள கோள்...................... ஆகும்.
(வியாழன், புதன்)

* இல 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

16. ஒருவர் 1 லீற்றர் பாலை வாங்கி, அதில் 375 மில்லிலீற்றரைப் பாவித்துவிட்டார். மிகுதியாக உள்ள பாலின் அளவு யாது?
i) 725 ml ii) 625 ml iii) 375 ml

17. 1 டசின் பென்சில்களின் விலை ரூபா 72.00 எனின் 5 பென்சில்களின் விலை யாது?
i) ரூ 5.00 ii) ரூ.6.00 iii) ரூ.30.00

18. ஒரு மேசைக்கரண்டியின் கொள்ளளவு யாது?
i) 5 ml ii) 10 ml iii) 50 ml

19. 8 மீற்றர் நீளமான துணியில் 50 cm வெட்டப்பட்டால் மிகுதி எவ்வளவு?
i) 3 m 50cm ii) 5 m 50cm iii) 7 m 50cm

20. ஒரு சமபக்க முக்கோணியின் ஒரு பக்க நீளம் 2m 75 cm ஆயின், அதன் சுற்றளவு யாது?
i) 8m 25cm ii) 5m 50cm iii) 11m 75 cm

* இல. 21 முதல் 25 வரை சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

21. குயில் முட்டையை அடை காக்கும் (........)
22. தாவரங்கள் வளர சூரிய ஒளி தேவையில்லை (........)
23. நத்தை முள்ளந்தண்டு உள்ள விலங்கு ஆகும். (........)

24. கிளியோன்றின் உருவத்தைச் செய்வதற்குப் பொருத்தமான மூலப்பொருள் குருத்தோலை ஆகும். (........)

25. மரதன் ஓட்டப்போட்டி மைதானத்தில் நடைபெறும். (........)

❊ இல. 26 முதல், 27 வரை உருக்களின் கோலம் அமைந்த ஒழுங்கினை அவதானித்து நான்காவது கூட்டின் இடைவெளியை நிரப்புக.

26.




27.




28. இந்த வடிவம் எத்தனை முக்கோணிகளைக் கொண்டு உருவம் ஆகக் பட்டது.



(.....................)

29.



இந்த உருவில் எத்தனை அதிகூடிய முக்கோணங்கள் உண்டு?

(.....................)

30.



இச் சமபக்க முக்கோணியின் சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.

❊ மேல மாகாணத்தில் 5ஆம் தரத்தில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சையில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்றுள்ள தகவல்கள் சேகரிக்கப் பட்டுள்ளன.

33 பாடசாலைகளில் மூன்று இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு
ஆண், பெண், பெண்

67 பாடசாலைகளில் இந்த மூன்று இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு
பெண், பெண், ஆண்

❊ இத் தகவல்களைப் பயன்படுத்தி, இல. 31 முதல் 32 வரை வினாக்களுக் குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. இந்த 100 பாடசாலைகளிலும் மாதிரிப்பரீட்சையில் 2ஆம் இடத்தைப் பெற்ற பெண் பிள்ளைகள் எத்தனை பேர்?

.....................................................................

32. இந்த 100 பாடசாலைகளிலும் மாதிரிப்பரீட்சையில் 3ஆம் இடத்தைப் பெற்ற பெண் பிள்ளைகள் எத்தனை பேர்?

.....................................................................

❊ இல. 33, 34 வினாக்களுக்குப் பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

33. சிறந்த பையன் பரீட்சையில் சித்தியடைந்தான். இந்த வாக்கியத்தி லுள்ள பெயரெச்சம் யாது?

.....................................................................

34. கறுத்தத் திரண் பாம்பை அம்மா கண்டாள். இந்த வாக்கியத்தி லுள்ள செயற்படுபொருள் அடைமொழி யாது?

.....................................................................

❊ இல. 35 - 40 வரை பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு கூடு களை நிரப்புக.

35. கூடுகட்டத் தெரியாத பறவை

36. புற்றில் வாழும் பிராணி

37. நுளம்புகளால் பரப்பப்படும் நோய் ஒன்று

38. நீரிலும், நிலத்திலும் வாழும் பிராணி

39. ஊர்வனவற்றுள் ஒன்று

40. பாம்பு, உடும்பு, எலி போன்றவை வாழும் இடம்.

| | | | |
|---|---|---|---|
| 35 | ......... | ......... | ல் |
| 36 | ......... | ம் | ......... |
| 37 | ......... | ......... | கு |
| 38 | த | ......... | ......... |
| 39 | ......... | ......... | டை |
| 40 | பு | ......... | ......... |

1. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

கவிதாவும், தந்தையும் பொருட்கள் வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றனர். பலவிதமான பொருட்களையும் வாங்கிக் கொண்டு, பழங்கள் விற்கும் பகுதிக்குச் சென்றனர். அங்கு பல நிறங்களில் பலவிதமான பழங்களைக் கண்டனர். வாழைப்பழம், மாம்பழம், தோடம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், பலாப்பழம், அன்னாசிப்பழம் முதலிய பலவகைப் பழங்கள் காணப்பட்டன. எல்லாப் பழங்களும் நல்ல வாசனை யுடையனவாய் இருந்தன. பழங்களில் உயிர்ச்சத்து, ஏ.பி.சி என்பன உண்டு. பழங்களிலிருந்து பழரசம், பழப்பாகு தயாரிக்கப்படுகின்றது.

1) கவிதாவும் தந்தையும் எங்கு சென்றனர்?

.....................................................................

2) பழங்கள் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று தருக.

.....................................................................

இங்கே மடிக்கவும்



3) நல்ல வாசனை என்பதற்கு எதிர்கருத்துள்ள சொல் தருக.

.....................................................................

4) பொருட்கள் என்பதற்கு ஒருமைச் சொல்லினை எழுதுக.

.....................................................................

5) இப்பந்தியில் எத்தனை பழங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன?

.....................................................................

6) பழங்களில் உள்ள உயிர்சத்துக்கள் எவை?

.....................................................................

7) பழங்களில் இருந்து தயாரிக்கப்படுபவை எவை?

.....................................................................

8) வாங்கிக் கொண்டு என்பதைப் பிரித்து எழுதுக.

.....................................................................

9) பொருட்களை விற்போரும் வாங்குவோரும் கூடும் இடம் ..................... என அழைக்கப்படும்.

10) பந்தியிலுள்ள படர்க்கைப் பன்மைச்சொல் ஒன்று எழுதுக.

.....................................................................

2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1) மிகுந்த /தயார் /லில்பர்ரைட் /கொண்டவர் /பாசம் /மீது

.....................................................................

2) கூறினான் /குருவிடம் /சீடன் /நடந்தவற்றைக் /தனது /சென்று

.....................................................................

3. பின்வரும் வாக்கியங்களைப் பால் மாற்றி எழுதுக.

1) கெட்டிக்கார மாணவியை எல்லோரும் பாராட்டினர்

.....................................................................

2) மாமா நேற்று ஹட்டனுக்குச் சென்றார்

.....................................................................

4. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1) புத்தகம் ..................... 2) அதிர் .....................

3) வகுப்பறை ..................... 4) பலூன் .....................

5. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.

1) ball ..................... 2) face .....................

3) Plantain ............ 4) bicycle .....................

(தொடரும்....)

# க.பொ.த (உ/த) தமிழ்மொழி

## போர்த்துக்கேயர் காலம்

ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தையடுத்து, ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி 1505 முதல் கி.பி 1658 வரையுள்ள காலப்பகுதி போர்த்துக்கேயர் காலமாகும். இந்தக் காலத்தே தோற்றம் பெற்ற இலக்கியங்களானவை - ஞானப்பள்ளு, அர்ச்யாகப்பர், அம்மானை, ஞானாநந்தபுராணம் முதலான கத்தோலிக்க மத நூல்களாகும்.

### ஞானப்பள்ளு

i) இந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க இலக்கியம் ஞானப்பள்ளு ஆகும்.

ii) யேசு நாதனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு கத்தோலிக்க மதத்தைப் போற்றியும், புகழ்ந்தும் பாடப்பட்டது.

iii) மதப்பிரசாரத்தைக் குறிக்கோளாகக்கொண்டு பள்ளுப் பிரபந்த இலக்கணத் திறகமைய ஆக்கப்பட்டது.

iv) முத்தப்பள்ளி, பள்ளன் ஆகிய இருவரும் கிறிஸ்துநாதரின் பிறப்பிடமாகிய ஜெருசலைம் நாட்டவராகவும், இளையபள்ளி ரோமாபுரி நாட்டவராகவும், பண்ணைக்கு உரிமையாளராகவும் சித்தரிக்கப்படுகிறது.

v) இந்நூல் சிந்து, கலிப்பா, விருத்தப்பா, வெண்பா ஆகிய யாப்புக்களால் ஆக்கப்பட்டு 257 செய்யுட்கள் உடைய நூலாகும்.

vi) இந்த நூலை வேதப்பள்ளு எனவும் அழைப்பர், நூலாசிரியர் யாரென அறியமுடியவில்லை.

### அர்ச் யாகப்பர்

i) சந்யேமஸ் என்ற கிறிஸ்தவப் புனிதர் பெயரில் எழுந்ததாகும்.

ii) இந்த நூல் 53 பகுதிகளைக் கொண்டது.

iii) நூலின் முற்பகுதியிலும், பிற்பகுதியிலும் கோயில் வரலாறு கூறப்பட்டுள்ளது.

iv) கி.பி.1647 ஆம் ஆண்டு கார்த்திகை, மார்கழி மாதங்களில் பாடப்பட்ட தாகப் பாயிரம் கூறுகிறது.

v) இந்த நூலாசிரியர் தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுருப் புலவர் ஆவார். இது விருத்தப்பாவால் ஆக்கப்பட்டது.

### ஞானாநந்தபுராணம்

i) தொம்பிலிப்பு அவர்களால் தொம்யோகு முதலியின் விருப்பப்படி பாடப்பட்டது.

ii) இந்தப் புராணம் 1104 விருத்தப்பாக்களால் ஆனது.

iii) இந்த நூலின் காலம் பற்றிக் கருத்து முரண்பாடு காணப்படுகிறது.

**போர்த்துக்கேயர் கால இலக்கியப் பண்புகள்.**

வடசொற்கள் விரவிவருதல்

அண்டகோளம், ரூபலங்காரம், ஏகமாகித்திருவமாகி, கோத்திரத்தோன், அந்தமுடன், இரத்தினம், சூரியன் போன்றவையும் காணப்படுகிறது.

பேச்சு வழக்குச் சொற்களைக் கையாளுதல்

"துண்டவை பிறைச் சூரியனும் மண்ணும் தோற்றலே"
"அண்டர் நாதன் திருத்தோளிலே வைத்து"
"தெருவு நீள நிழல் கொண்டு"
"மாணிக்கச் செப்பே வயிர மணிவிளக்கே"
"சன்னாசிமார்கள் சலிப்பின்றி இங்கு வந்து"
என்று வரும் சொற்களைக் குறிப்பிடலாம்.

செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற வேறுபாடு கொண்டிருத்தல்.

"செந்தமிழ்ப் பள்ளியது தேஹுவல்லிப் பாடுதற்கு" என ஞானப்பள்ளிலும் "செந்தமிழாற் கிளத்தினார் இந்தக் கதையை" என அர்ச்யாக 'பர் அம்மானையிலும் வரும் அடிகள் மூலம் புலனாகிறது.

கத்தோலிக்க மதப்பிரசாரம் காணப்படுதல்.

"ஏகநாதன் பிறந்தே வளர்ந்து எமக்கே வேண்டி இறந்தே வுயிர்த்து" என ஞானப்பள்ளியிலும் போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் யேசு நாதரையும், சந்யேமஸ் என்ற கத்தோலிக்கப் புனிதரையும் பாராட்டி யுள்ளது.

உதாரணம் : ஞானப்பள்ளு
"புவியோர்கள் தமக்காய் ஜெருசலையிற் சுமந்த சிலுவையை"
அர்ச்யாகப்பர் அம்மானை
"முந்திய யாக்கோப்பு முத்தருக்கு முன் பிறந்த சந்தியாகின் கதையை
எனவும் மதரீதியான வேறுபாட்டையும் காணலாம்.

இரு காலத்திலும் பள்ளு என்ற பிரபந்தம் தோற்றம் பெற்றாலும், பொருள் மரபில் வேறுபாடு உடையது.

ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் எழுந்த கதிரைமலைப்பள்ளு கதிர்காம முருகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது.

# ஒரு லட்சத்து 50 ஆயிரம் மீனவருக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை!

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் இலங்கையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

18 வயது தொடக்கம் 59 வரை ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் இணையலாம். இவர்கள் 2720 ரூபாவைச் செலுத்தி, அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அவர் 60 வயதைப் பூர்த்திசெய்தால் அவருக்கு மாதாந்தம் 4164 ரூபா ஓய்வூதியமாகக் கிடைக்கும்.

55 வயதிலிருந்து 59 வயது வரை ஓய்வூதியத்தில் சேர்ந்தால், மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமான விபரங்களைக் கடற்தொழில் அமைச்சிலும், பிராந்திய கடற்தொழில் காரியாலயங்களிலும் பெற்று ஓய்வூதியத் திட்டத்தில் இணையலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

# தமிழகத்திலிருந்து திரும்பியோருக்கு மீனவ முயற்சியாண்மைப் பயிற்சி!

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து வந்து நெடுந்தீவில் மீளக் குடியமர்ந்த கடற்தொழில் குடும்பங்களுக்கு 'மீனவ முயற்சியாண்மைப் பயிற்சி' - ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் அனுசரணையுடன் CEFE நிறுவத்தால் நெடுந்தீவில் நடத்தப்பட்டது

இந்தப் பயிற்சி வகுப்பு கடந்த 17, 18 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரைக்கும் நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 40 பேர் கலந்து கொண்டு பயனபெற்றனர்.

இவர்களுக்குத் தேனீர், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டதுடன், டிசம்பர் மாதத்துக்கான ஊக்குவிப்புப் கொடுப்பனவாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபா 1400 வழங்கப்பட்டதுடன், பயிற்சியின் நிறைவில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (113)

# புத்தூர் சந்திப்பகுதியில் ஹையேஸ் - பஸ் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் சந்தியில் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் ஹையேஸ் வான் மோதியதில் வான் பெரும் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ், புத்தூர் சந்தியில் தரிததுப் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த சமயம் பின்தொடர்ந்து வந்த ஹையேஸ் வான் பஸ்ஸுடன் மோதியதில் பஸ்ஸின் பின்பகுதி பெரும் சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. எனினும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகனங்கள் இரண்டையும் அச்சுவேலி பொலிஸார் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

# அன்னையர் முன்னணி
# சட்ட உதவிகள் மன்றத்துக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தத் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்டோர் பாதுகாவலர் அன்னையர் முன்னணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை சட்ட உதவிகள் மன்றத்துக்கு முன்பாக மறியல் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு, காணாமறபோனோர் தொடர்பாக இராணுவத்தினர் நீதிமன்றத்துக்கு வந்து பொய்ச்சாட்சி கூறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இலவச சட்ட உதவிகள் மன்றம் மேற்கொள்வதற்கு முன்வரவேண்டுமென்ற கோரியே இந்த மறியல் போராட்டம் நடத்தப் படவுள்ளது.

நீதியை நிலைநாட்டும் பொருட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி, குற்றவாளிகளை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியே இந்த மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முனியப்பர் கோயில் முன்றலில் அன்னையர் முன்னணி தலைவி எஸ். கனகாம்பிகை தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (91)

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கழிவுகளை அகற்ற கோரிக்கை!

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக் கழிவுகளைக் கொட்டுவதற்கு தகுந்த இடம் இல்லாததனாலும் வைத்தியசாலை முன் வீதிக் கடைக்காரர்கள் உட்படப் பலர், வைத்தியசாலை மலசல கூடங்களைப் பாவிப்பதாலும் வைத்தியசாலையில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலை காணப்படுகிறது.

எனவே இதில் உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு, வைத்தியசாலை நிர்வாகம் பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளது. இதன்படி பருத்தித்துறைப் பிரதேச செயலர், வைத்தியசாலைக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

அந்தவகையில் பருத்தித்துறைப் பிரதேசசபைச் செயலாளர், அந்தப் பகுதி கிராம அலுவலர், பொது சுகாதாரப் பரிசோதகர், சுற்றுச்சூழல் உத்தியோகத்தர்களைக்கொண்ட குழுவினர் ஒன்று சேர்ந்து கழிவுப்பொருட்களை சுகாதார முறையில் அகற்றி, கொட்டுவதற்கு தகுந்த இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆலோசனைகளை மேறகொண்டிருக்கின்றனர்.

## பயன்தரு மரக்கன்றுகள் அன்பளிப்பு

வலி.கிழக்கு பிரதேச சபையால் சனசமூக நிலையங்களுக்குப் பயன்தரு மரக்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, நூறு மரக்கன்றுகள் எதிர்வரும் கிழமையில் வழங்கப்படவுள்ளது. அத்துடன் கடந்த மாதமும் பிரதேச சபையால் முன்பள்ளிகளுக்கு 200 மரக்கன்றுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (90)

## நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையில் கூட்டுவழிபாடு

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையும், கத்தோலிக்க திருச்சபையும் இணைந்து நாளை மாலை 4 மணிக்கு தென்னிந்திய திருச்சபை வளாகத்தில், கூட்டு வழிபாட்டில் ஈடுபடவுள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் முதன்முறையாக இந்தவருடமே, இந்த நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளார் மற்றும் தென்னிந்திய திருச்சபை போதகர் எஸ்.யோன் செல்வம் ஆகியோரின் ஏற்பாட்டிலேயே இந்த இசை நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது. (113)

# போக்குவரத்துக்கு இடையூறாகும் பெயர்ப்பலகைகள் அகற்றப்படும்!

(நல்லூர்)

திருநெல்வேலி சந்தைப்பகுதி நடைபாதை ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும் வியாபார நிலைய விளம்பரப் பலகைகள், மக்களின் போக்குவரத்துக்குப் பாரிய இடையூறாக இருந்தது.

இது தொடர்பாக பொது மக்கள் நல்லூர் பிரதேச சபை செயலகத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, நல்லூர் பிரதேச சபையினர் வர்த்தகர்களுக்கு அவ்வாறான விளம்பரப் பலகைகளை அகற்றி ஒத்துழைப்புத் தருமாறு அறிவித்துள்ளனர்.

அதனை நடைமுறைப்படுத்தாது வர்த்தக நிலையங்களின் முன்னால் போக்குவரத்துக்கு இடையூறாக வைக்கப்படும் பெயர், விளம்பரப் பலகைகள் திடீர் நடவடிக்கை மூலம் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, நல்லூர் பிரதேச சபை செயலர் சொ.வைரமுத்து தெரிவித்தார். (63)



கோப்பாய் பரி.கன்னிமேரி ஆலய பாலர் பாடசாலை பாலகர்களின் கலை நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் திருமதி ஆர்.ஈ.ஜோர்ஜ் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (63)

# வெள்ள நிவாரணத்துக்கான அத்தியாவசியப் பொருள் சேகரிப்புக்கு உதவுங்கள்

பெரும் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதி மக்களுக்கு உதவும் வகையில், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அத்தியாவசியப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அராலி வடக்கு, அராலி கிழக்கு, அராலி தெற்கு, அராலி மேற்கு, அராலி மத்தியில் உள்ள சனசமூக நிலையங்கள், சுழிபுரம் மேற்கு அலைமகள் கூட்டுறவுச் சங்கம், பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையம், குடாக்கணை அம்பாள் சனசமூக நிலையம், சுழிபுரம் மேற்கு சிறிகணேசா சனசமூக நிலையம், சுழிபுரம் பாரதி கலை மன்றம் என்பன பெரியளவில் உதவுவதாக உறுதி கூறியுள்ளன.

அதேபோன்று ஏனைய அனைத்து சமூகநல அமைப்புக்களும் தாமாகவே முன்வந்து எமது உறவுகளின் துயர்துடைக்க உதவுமாறு, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் கோரியுள்ளதுடன், யாழ்ப்பாணத்திலுள்ள சகல பகுதியிலும் பொருட்களைச் சேகரிக்க வரும் போது அவற்றைத் தந்துதவுமாறு கோரியுள்ளது.

## போக்குவரத்து திணைக்களப் பணிகள் ஜனவரியில்

(யாழ்ப்பாணம்)

வருட இறுதி வேலைகளை முடிக்கும் நோக்குடன் - எதிர்வரும் 27 ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதிவரை யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பொது மக்களுடனான தொடர்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மீண்டும் ஜனவரி 3 ஆம் திகதிமுதல் வழமைபோல் இடம்பெறும். (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.கோமிதன்
முகவரி : ஸ்கந்தபுரம்

மூன்றாவது அகவையில்



பெயர் : சி.தமிழன்பன்
முகவரி : வன்னேரிக்குளம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.




வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டாயுதபாணிக தேசிகரின் மணிவிழா நிகழ்வில் - மணிவிழா மலராகிய 'தண்டபாணீயம்' என்னும் நூலை பேராசிரியர் சண்முகதாஸ் வெளியிட்டு வைத்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (14)

# கனகம்புளியடியிலுள்ள மதகில் பாரிய குழி!

(சாவகச்சேரி)

நுணாவில் சந்தியில் இருந்து கனகம்புளியடிச் சந்திவரை செல்லும் சுமார் 5 கிலோமீற்றர் நீளமான வீதியில், கனகம்புளியடிச் சந்திக்கு அருகாமையிலுள்ள மதகு ஒன்றில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்தக் குழி உடனடியாகச் சீர் செய்யப்படாதுவிட்டால், இந்த வீதியூடான போக்குவரத்துத் தடைப்படும் அபாயம் உள்ளது.

775, 794 ஆம் இலக்க பஸ்கள் செல்லும் பாதை இதுவாகும். அத்துடன் கைதடிப் பாலத்தின் திருத்த வேலைகள் காரணமாக கனரக வாகனங்களும் இதனூடாகவே செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டக்கச்சியில் மருத்துவ சிகிச்சை!

அண்மையில் பெய்த கடும் மழை வெள்ளத்தால் வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், பன்னங்கண்டி, ஜொனிபுரம், மாவடி, மாயவனூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து - இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 250 பேர்வரையில் தங்கியுள்ளனர்.

இவர்களில் 65 பேர் நோயாளியாக இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நோயாளிகளில் பெரும்பாலோனோர் - வைரஸ் காய்ச்சல், மற்றும் முட்டு, வயிற்றோட்டம், சளி, சிரங்கு, மலேரியா, இரத்தச் சோகை போன்ற நோய்களுக்கு இலக்காகியுள்ளனர் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான வைத்திய சேவையை மேற்கொண்ட வட்டக்கச்சி வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி கு.வீரபத்திர பிள்ளை நோய்களை இனங்கண்டு, அவர்களுக்கான மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த வைத்திய சேவை தொடர்ந்து இடம்பெறவுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (9)

# குழந்தைகளின் போஷாக்கு நிலைமை சம்பந்தமான ஆய்வறிக்கை வெளியானது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குழந்தைகளின் போஷாக்கு நிலைமைகள் சம்பந்தமான ஆய்வு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினரால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு சம்பந்தமான விபரங்கள் நேற்றுக்காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது என பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஜெயகுலராஜா தெரிவித்தார்.

# புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் 54 குடும்பங்களுக்கு உலர் உணவுகள்

(அக்கராயன்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினரால் - அக்கராயன், கண்ணகிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும், 12 சிறுவர்களுக்கு பால்மா என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் போரூட் நிறுவன நிதி உதவியுடன் அக்கராயன் மகா வித்தியாலயத்திலும், ஸ்கந்தபுரம் இலக்கம் 01 பாடசாலையிலும் தங்கியிருந்த 85 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

# போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் முல்லைத்தீவு - பாண்டியன்குள பிரதான வீதி

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளப் பிரதேச வீதிகள் சீரான முறையில் புனரமைக்கப்படாமையால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள குடியிருபபு வீதிகள் - வீதி அமைப்பு அதிகார சபையினரின் கீழுள்ளன. இருந்தும் இந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதேவேளை, உலக உணவுத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட சில வீதிகள் சீரான முறையில் புனரமைக்கப்படாமையினால், தொடர்ந்து பெய்த கடும் மழையால் படுமோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

# அக்கராயன் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பிரதேச அரசியற்துறையினர், கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து கடந்த சில தினங்களாகச் சமைத்த உணவுகளை வழங்கினர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து அக்கராயன் மகா வித்தியாலயம், கரித்தாஸ் குடியிருப்பு, அக்கராயன் பிள்ளையார் ஆலயம், ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வன்னேரி மகாவித்தியாலயம், ஐயனார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஸ்கந்தபுரம் இலக்கம் 01 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆகிய இடங்களில் தங்கியிருந்த 568 குடும்பங்களுக்கே சமைத்த உணவு வழங்கப்பட்டது.

# தமிழீழ கல்விக் கழகத்தின் உயர்தரத் தேர்வுக்கு தோற்றும் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்!

தமிழீழக் கல்விக் கழகத்தால் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரத் தேர்வுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சிறப்பு வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு உயர்தரத் தேர்வுக்குத் தோற்றுகின்ற புவியியல் பாடத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தூட்டல் வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தக் கருத்தூட்டல் வகுப்பானது நேற்றுமுன்தினம் கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 29 ஆம் திகதி, 30 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு றெட்பானா பாரதி வித்தியாலயத்திலும், எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

# பொன்னம்பலம் மருத்துவமனையில் இதயநோய் சம்பந்தமான சிகிச்சை!

கிளிநொச்சி டொக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் விசேட இதய சிகிச்சை நிபுணரின் ஆலோசனைகளும், சிகிச்சையும் இடம்பெறவுள்ளன.

இந்தச் சிகிச்சை இன்றும், நாளையும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்த வைத்திய சேவையை, அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்திருக்கும் இதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மனமோகன் வழங்கவுள்ளார்.

இதில் பயன்பெறவிரும்பும் நோயாளிகள், மேற்படி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு மருத்துவப் பிரிவு நடுவப்பணியகப் பொறுப்பாளர் க.தமிழ்வாணண் தெரிவித்துள்ளார்.

# காவற்துறையினர் வீதிக் கடமையில்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இரவுநேர வீதிகடமைகளிலும், முக்கிய சந்திகளிலும் காவற்கடமையிலும் தமிழீழ காவற்துறையினர் ஈடு பட்டுவருகின்றனர். இந்தக் காவற் கடமை வட்டக்கச்சி தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் கிங்ஸ்லி தாஸ் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

# மருந்தால் மட்டும் ஒரு நோயாளியின் நோயைக் குணப்படுத்த முடியாது!

## வைத்திய கலாநிதி கெங்காதரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மருந்து, குளிகை மட்டும்தான் ஒரு நோயாளியின் நோயைக் குணப்படுத்தும் என்றல்ல. இதமான சூழல், இனிமையான இசை என்பனவுமே ஒரு நோயாளியின் நோயைக் குணப்படுத்தும் என மேலைத்தேய வைத்திய நிபுணர்கள் ஆய்வின் மூலம் உறுதிபடுத்தியுள்ளனர். அத்தகைய ஒரு சூழலை நோயாளர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தது மிகவும் வரவேற்கத்தக்க விடயம் என வைத்திய கலாநிதி கெங்காதரன் தெரிவித்தார்.

"சோ ஆ" நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தால், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட நோயாளர் பொழுதுபோக்கு நிலையத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இத்தகைய நோயாளர் பொழுது போக்கு மையத்தை அமைப்பதற்கு நிதியுதவி செய்த "சோ ஆ" நிறுவனத்தினருக்கு, இந்த நிலையத்தில் பொழுது போக்கும் நோயாளர்கள் என்றும் நன்றியுள்ளம் படைத்தவர்களாக இருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழ தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், மங்கள விளக்கேற்றல் என்பவற்றுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில், வரவேற்புரையை வைதத்திய கலாநிதி டேமியன் தவப பிரகாஷ் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை கிளிநொச்சி மருத்துவ சங்கத்தலைவர் கலாநிதி பி. பிறைற்றன் நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினராக 'சோ ஆ' திட்ட இணைப்பாளர் ஹரல்ட் வேர்பூம் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் கலாநிதி த. பேரானந்தராஜா, தமிழீழ வணிக ஒன்றியத தலைவர் செ.ஜெகராஜ், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழீழ மருத்துவப் பொறுப்பாளர் மனோஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் நோயாளர் பொழுதுபோக்கு மண்டபம் கிளிநொச்சி 'சோ ஆ' நிறுவன திட்ட இணைப்பாளர் ஹரல்ட் ஜேர்பூம் அம்மையாரால் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கலாநிதி பேரானந்தராஜா எழுதிய 'நாட்ப்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கான அறிவுரைகள்' எனும் நூலின் வெளியீட்டு விழாவில், இந்த நூலின் முதற் பிரதியை தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மனோஜ் வெளியிட்டுவைக்க, கலாநிதி பெஞ்சமின் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலைப் பணியாளர்கள் கௌரவித்தல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து ஒளிவிழாவும், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மதகுருமார்கள், நோயாளர்கள், வைத்தியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க)








வடக்கு - கிழக்கு விரிவாக்கல் பிரிவினரால், கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைப்பதை முதற் படத்திலும், தலைமையுரையை திருமதி ஆனந்தராசா நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.




## கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பு

மன்னார் - தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், பாலியாறு ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகள் பயிர்களை அழித்து வருகின்றன. அததோடு பொதுக் கட்டடங்களையும் அசுத்தம் செய்து வருகின்றன. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி விவசாயிகள்-கால்நடைகள் வளர்ப்போரிடம் கேட்டுள்ளனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com


**சிந்தனைக்கு**

*அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புஉடையார்
என்பும் உரியர் பிறக்கு.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## இலங்கையின் தலைவிதி ஜனாதிபதியின் கையில்...

சிங்கள பேரினவாத சக்திகளின் சமாானத்திற்கெதிரான குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் தென்பகுதியில் இருந்து சிலவேளைகளில், மிகவும் அபூர்வமாக சில நியாய பூர்வமான யதார்த்தத்தை உணர்ந்து பேசும் குரல்களும் ஒலிக்கச் செய்கின்றன.

இந்த அர்த்தமுள்ள ஆக்கபூர்வமான குரல்கள் கூறும் கருத்து நிலைப்பாட்டிற்கு தென்பகுதியில் பெரும்பான்மை சமூகத்தவரிடையேயும், புத்திஜீவிகள் மத்தியிலும் எத்தகைய வரவேற்பு உள்ளது என்பதை வெளிப்படையாக மதிப்பீடு செய்முடியாவிட் டாலும், அத்தகைய ஆதரவுத்தனம் வலிமையற்றதாக அநியாயங்களுக்கெதிராக குமுறி எழுந்து பேராடும் திறனற்றதாக மௌனம் காக்கும் ஒன்றாகவே உள்ளது என்பதே உண்மையாகும்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம்செய்த தென்பகுதி ஊடகவியலாளர்கள் சிலருடன் பேசிக்கொண்டு இருக்கும்போது, அவர்களில் ஒருவர் தென்பகுதி சாதாரண பொதுமக்கள் அப்பாவிகள் என்றும், அவர்களின் அரசியல் ஞானம் பூச்சியமாகவேயுள்ளதென்றும், வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினைகளின் நியாயத் தன்மை குறித்து அவர்களிடம் சரியான விளக்கமில்லையெனவும், இதுவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் எனவும் கூறியதுடன், தென்பகுதி மக்களின் பிரதான அரசியல் தலைமைகளின் பிரதான இலக்கு ஆட்சிப் பீடத் தலைமைப் பதவியைக் குறிவைத்தே இயங்குவதாகவும் கூறினார்.

அத்துடன், அவர்கள் மக்கள் மற்றும் தேசிய நலன் குறித்தும் பேசுவதெல்லாம் வெறும் "பம்மாத்து" நடவடிக்கைதான் என்று கூறிய அவர், சிங்கள மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படாதவாறு அவர்கள் கவனமாகவுள்ளனர் எனவும் தெரிவித்ததுடன், சிங்கள மக்களின் அரசியல் அறிவின் "வங்குரோத்து" நிலையே இந்த நாட்டின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணம் என்றும் கூறினார்.

சரியான கருத்தாகவும் இது இருக்ககூடும். ஆனாலும், அந்த மக்களுக்கு அரசியல் விழிப்பை ஏற்படுத்தவேண்டிய தென்பகுதி ஊடகவியலாளர்கள் அதற்காக என்னமுயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றகேள்விக்கு முறையான பதில் அவர்களிடம் இருந்து கிடைப்பதாக இல்லை.

போர் தென்பகுதி மக்களின் வீட்டு வாசல்களை நோக்கி அவலச் செய்திகளை சுமந்து வந்த கொடுமைகளை அனுபவபூர்வமாக உணர்ந்த பின்னரும் கூட, சமாதான எதிர்ப் பாளர்களுக்கு வாக்களித்து ஆட்சிபீடம் ஏற்றும் கொள்கையில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பதையே கடந்த தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.

எனவே, யுத்தத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களோ இல்லையோ அதை அவர்கள் முற்றாக நிராகரிக்கவில்லை என்றே உணரக்கூடியதாகவுள்ளது.

இன்னும் தெளிவாக ஒன்றைக் கூறுவதானால் ஜே.வி.பியினரின் செயற்பாடுகளுக்கு அஞ்சியோ என்னமோ அவர்களின் சமாதானவிரோத நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்க முயல்வது சிங்கள மக்கள் தங்களை நோக்கி குவிமையம் கொண்டுவரும் தேசிய அவலம் ஒன்றின் ஆபத்துக் குறித்து அவர்கள் உணர்கிறார்கள் இல்லையென்பதை உறுதி செய்வதாகவுள்ளது.

அவர்களின் இந்த தொலைநோக்கு சிந்தனையற்றதும், பட்டறிவு அனுபவத்தை மறந்ததுமான செயற்பாடுகளே இன்று சமாதான முயற்சிகளின் எதிர்ப்பாளர்களை ஆட்சிபீடம் ஏற்றியுள்ளதெனலாம்.

இதுவே, இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணமுமாகிவிட்டது. சமகால அரசியல் யதார்த்தத்தை எதிர்கால மதிப்பீட்டுடன் கூறி எச்சரிக்கை செய்யும் சமூக மற்றும் தேசியப் பொறுப்புடன் சிந்திக்கும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் தென்பகுதி ஆட்சியாளர்களையும், பொதுமக்களையும் விழிப்புணர்வுகொள்ள வைக்காதநிலையில், இலங்கையில் சமாதானம் என்பது அதன் எதிர்கால நம்பிக்கைகள் அனைத்தையும் இழந்து போய்விட்டது என்றால் அதில் மிகையில்லை.

போர் மேகத்தை மீண்டும் கருக்கொள்ளவைக்கும் அரசின் பொறுப்பற்ற அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகள் ஏற்படுத்தப் போகும் அவலம் குறித்து அர்த்தமுள்ள எச்சரிக்கையுடன் கூடியயோசனையொன்றினை அரசுக்கு விடுத்துள்ளார் இலங்கையின் முன்னாள் விமானப்படைத்தளபதியான ஹரி குணதிலக.

'ஜே.வி.பியை நரகத்திற்கு அனுப்பிவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளுங்கள்... தவறின் விடுதலைப் புலிக ளின் அடுத்த கட்ட நகர்வு –மகிழ்ச்சி தரும் ஒன்றாக இராது' என அவர் விடுத்துள்ள எச்சரிக்கையின் நியாயத் தன்மையை அரசு உணர்ந்து கொள்ளுமா என்பதே இன்றைய கேள்வி.

இதற்கான பதிலை கூறவேண்டிய பொறுப்பு இன்று ஜனாதிபதிக்கேயுள்ளது.

# நாடும் நடப்பும்






## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# முற்பகலில் விதைத்தவை பிற்பகலில் அறுவடை!

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிடுகிறது.

கீழ் நீதிமன்றங்களில் நடைபெறும் பூர்வாங்க விசாரணைகளால் காலதாமதமேற்படுவதால் இனி பூர்வாங்க விசாரணைகள் நடைபெறுவதை இல்லாமலொழித்து, மேல் நீதி மன்றங்களிலேயே கொலைகள் போன்ற குற்றச்செயல்களை நேரடியாகவே விசாரணைசெய்து, தாமதமில்லாமல் தீர்ப்பளிப்பதற்குச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்போவதற்கு அரசு ஆலோசனை செய்துவருகிறது.

கொலை, கொள்ளை போன்ற பாரிய குற்றச் செயல்கள் சமீப வருடங்களில் அளவுக்கு அதிமாகப் பெருகிவருவதற்கு என்ன காரணமென்பதை இன்னமும் கண்டுபிடிக்கவில்லையென்பது ஆச்சரியம்தான் என்று, சந்தையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஒரு வியாபாரி உரக்கச் சொன்னார்.

இதைக் கேட்ட பக்கத்து வியாபாரி நீர் கண்டுபிடித்திருந்தால் சொல்லிக் கொடுக்கலாமேயென்றார்.

'கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையா?' என்று சொன்ன முதல் வியாபாரி தொடர்ந்து சொன்னார். வெள்ளைக்காரன் ஆட்சி இருந்த காலத்திலும், அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களும் இராணுவம், பொலிஸ் போன்ற பாதுகாப்புச் சேவைக்கு ஆட்களைத் திரட்டும்போது சில நடைமுறைகளைப் பின்பற்றினார்கள்.

இந்தப் படைகளுக்கு ஆட்களைத் திரட்டும்போது அவர்களின் கல்வித் தகைமைகள், உயரம், பருமன், உடல்நிலை, ஆரோக்கியம் ஆகியவைகளுடன் தெரிவு செய்யப்படுவதில் குடும்பம் பற்றியும் ஆராய்ந்தார்கள். தெரிவுசெய்யப்படுபவர் குற்றச்செயல்களில் சிறுகுற்றங்களானாலும் அதில் ஈடுபட்டிருந்தாக என்பதை உறுதிசெய்து கொள்வார்கள். இது மட்டுமல்ல இவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் யாராவது எப்போதாவது சிறு குற்றச்செயலில் சம்பந்தப்பட்டு, காவல் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தாரா, நீதிமன்றத்தில் விசாரணைக்காகப் படியேறி இறங்கினாரா என்பது பற்றியெல்லாம் விசாரணைசெய்து பார்த்து, நல்ல குடும்பத்துப் பிள்ளை என்று உறுதிசெய்த பின்னரே பாதுகாப்புச் சேவைக்குத் தெரிவு செய்யப்படுவர். இதன் பின்னர் நல்ல முறையில் பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்படி மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து பாதுகாப்புச் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களே நாட்டின் பாதுகாப்புக்கும், சமூகத்தின் பாதுகாப்புக்கும் பொருத்தமானவர்களென்று அந்தக் காலத்தில் கணிக்கப்பட்டார்கள்.

ஒருதடவை பொலிஸ் சேவைக்கு புதிதாக ஆட்கள் திரட்டப்பட்டபோது, உதவிப் பொலிஸ்மா அதிபராக இருந்த சிட்னி டி சொய்சா ஆட்களைப் பரிசோதித்துத் தெரிவுசெய்வதற்குப் பொறுப்பாக இருந்தாராம்.

பொலிஸ் சேவையில் சேர்வதற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் ஓர் இளைஞன் அரசாங்கத்தில் மிக உயர்ந்த நிலையிலிருந்த ஒருவரிடமிருந்து கொண்டுபோயிருந்த சிபாரிசுக் கடிதத்தை சிட்னி டி சொய்சாவிடம் கொடுத்தாராம். அந்த இளைஞனின் உயரம், பருமன், எடை ஆகியவற்றை அளர்ந்து சரிபார்த்துக் கொண்டிருந்த சிட்னி டி சொய்சா சிபார்சுக் கடிதத்தை அந்த இளைஞனின் மார்பில் மேல் வைத்து அளவெடுத்தாராம். அப்போதும் உரிய அளவு வரவில்லை. உடனே அந்த சிபார்சுக் கடிதத்திலேயே கடிதம் வைத்துக்கூட அளவு சரியாக வரவில்லை என்று குறிப்பெழுதி, சிபார்சு செய்தனுப்பியவருக்கே திருப்பிக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி கூறி அனுப்பினாராம்.

இது அந்தக் காலம் -

இதற்குப் பின் சிலரின் சிபார்சுகளின் பேரிலும், பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சிலர் பணம் செலவு செய்தும் பொலிஸ் சேவையில் சேர்ந்ததாகச் சொல்லிக் கொண்டகாலமும் இடையில் வந்தது.

தொடர்ந்து நாட்டில் தமிழ்மக்களுக்கெதிரான ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை எதிர்த்து, தந்தை செல்வா தலைமையில் சாத்வீகப் போராட்டங்கள் தொடக்கப்பட்டதும், அதில் தமிழ்ப் பொதுமக்கள் பங்குபற்றினார்கள். சாத்வீகப் போராட்டங்களுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாண முயற்சி செய்யாமல், ஆட்சிக்கு வந்த சிங்கள ஆதிக்க சக்திகள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டன. அடக்குமுறைகளுக்கு ஆயுதபலத்தைப் பிரயோகிக்கத் தொடங்கின. இவற்றுக்காகப் பாதுகாப்புப் படைகளுக்கு ஆட்களைத் திரட்டினர். முதலில் இந்தப் படைகளில் சேர்ந்தவர்கள் தமிழ்ப்பகுதிகளில் தாம் நினைத்ததைச் செய்யமுடியும் என்ற துணிவைப் பெற்றனர்.

ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்கள், தமிழ்ப் பகுதிகளில் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டபோது ஆட்சியிலிருந்தவர்கள் இதைத்தட்டிக் கேட்காமலிருந்ததுடன் அவர்களுக்குத் தூண்டுதலாகவும் இருந்தனர். தமிழ் மக்களுக்கெதிராக 1958 இல், முதல் தடவையாக நாடுமுழுவதிலும் இனக் கலவரம் தூண்டிவிடப்பட்டபோது, பொலிஸார் சில பகுதிகளில் கண்டும், காணாமலிருந்தனர். பெரும்பாலான பகுதிகளில் காடையர்களின் வன்செயல்களுக்குப் பொலிஸார் தூண்டுதலாகவும், பாதுகாப்பாகவும் இருந்தனர்.

பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனதைத் தொடர்ந்து, இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டது. கொழும்பிலும் மற்றும் அதை அடுத்த முக்கிய நகரங்களிலும் கடற்படையினரும் சேவைக்கு அழைக்கப்பட்டனர். இராணுவத்திலும், கடற்படையிலும் அந்தக் காலத்தில் உயர் கல்வி கற்றவர்களும் ஒழுக்கம், கட்டுப்பாடுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், நன்கு பயிற்சி பெற்றவர்களும், உயர் மட்டத்திலும், அதன் கீழும் இருந்ததால் படையினருக்குரிய பண்புடன் செயற் பட்டனர். இனத்துவேஷம் அந்தச் சமயத்தில் படைகளை அணுகுவதற்குப் படைத்தலைமைகள் இடம்கொடுக்கவில்லை.

1956 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த சிங்களம் மட்டுமே அரச கருமமொழி என்ற சட்டத்தின் கீழ் கல்வி கற்றவர்களும், சிங்களம் மட்டுமே என்ற துவேஷத்தில் ஊறிப்போனவர்களும், காவல்துறையிலும், பட்டாளத்திலும் இடம்பெற்றனர்.

இதனால், பாதுகாப்புப் படைகளில் இனத்துவேஷம் முளைவிட்டுப்பறந்தது.

1961ஆம் ஆண்டில் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் மாபெரும் எழுச்சியாகப் பரிணமித்த சாத்வீகப் போராட்டத்தை சந்திரிகா அம்மையாரின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க ஆயுதப் படைகளைக் கொண்டு அடக்கினார்.

இதன் பின்ஆயுதப்படைகள் தமிழர் தாயகத்தில் பெருமளவில் குவிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் "கள்ளத்தோணிகளாகவும், கடத்தல்காரர்களாகவும் வரும் இந்தியர்களைக் கட்டுப்படுத்துவதற்காக என பலாலியில் அமைக்கப்பட்ட இராணுவமுகாம் பின்னர் தமிழ் மக்களின் உரிமைக் குரலை அடக்கும் முகமாக வலுப்படுத்தப்பட்டது.

சாத்வீகப் போராட்டங்கள் ஆயுத பலம்கொண்டு அடக்கப்பட்டதால், அதை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர வேறுவழி இல்லை என்று, தீர்மானித்த தமிழ் இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் திரண்டனர்.

கேட்பதற்கு யாரும் இல்லை என்ற துணிவுடன் தமிழர் தாயகத்தில் வெறியாட்டம் போட்டு, ஆயுதப் படைகளுக்கு விடுதலைப் புலிகள் ஆயுதங்களினாலேயே பதில் சொல்லத் தொடங்கினர்.

இதற்கு ஈடுகொடுக்க முடியாத ஆதிக்க சக்திகள் கல்வியறிவு, ஒழுங்கு, கட்டுப்பாடு என்ற தகைமைகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு துப்பாக்கிதூக்கி வெடிவைக்கப் பலம் அற்றவர்களையெல்லாம் பாதுகாப்புப் படைகளுக்குத் திரட்டினர்.

தமிழ்ப் பகுதிகளில் கொள்ளைகளிலும், கொலைகளிலும் ஈடுபட்ட இந்த உதவாக்கரைகள் விடுதலைப்புலிகளின் பதில் தாககுதலுக்கு ஈடுகொடுக்க முடியாது, படைகளிலிருந்து ஆயிரக் கணக்கில் ஆயுதங்களுடன் ஓட்டம் பிடித்தனர்.

தமிழ்ப் பகுதிகளிலும் கொலை, கொள்ளைக்கு ஊக்கம் அளித்த ஆதிக்க சக்திகள் இப்பொழுது இந்த அரைகுறைப் படிப்பும், அரைகுறைப் பயிற்சியும் பெற்ற ஓடுகாலிகள் தங்கள கைவரிசைகளை தங்கள் சொந்த இடங்களிலேயே காட்டி வருவதைத் தடுக்கமுடியாமல் திண்டாடுகின்றனர்.

தமிழ மக்களுக்கு எதிராக கொலைகளையும் , கொள்ளைகளையும் வளர்த்து விட்டவர்களே இப்பொழுது அனுபவிக்கின்றனர். முற்பகல் செய்தது பிற்பகலில் விளைந்திருக்கிறது. இவர்கள் அனுபவித்துத் தெளியட்டும் என்று முடித்தார் சந்தைக் கடைக்காரர்.

கே.ரீ. கணேசலிங்கம்





**போர் விளிம்புக்குள் சென்றுகொண்டிருந்த இலங்கையின் போக்கைக் குறிப்பாக அரசாங்கத்தின் அணுகுமுறையை, சர்வதேச சக்திகள் கண்டித்துள் ளன. குறிப்பாக ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அணுகு முறையில் ஜே.வி.பி.யின் போக்கைச் சர்வதேச சக்திகள் கண்டித்துள்ளதுடன் இந்நிலை தொடர்வது பொருளாதார அடிப்படையிலான சிக்கல்களை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் என்பதையும் அவர்களின் கூட்டான அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.**



# இலங்கையின் தற்போதைய முரண்பாடுகள் யாவும் முழுமையாகத் தீரும் அறிகுறிகள் தென்படவில்லை





மிக நீண்டகாலமாக சமாதானமும், பேச்சுக்களும் நிகழ்ந்துவந்தாலும், தற்போதைய சமாதான முயற்சியின் பங்கு சர்வதேச சமூகத்திற்கு அதிகமானது. சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் ஆரம்பமான பேச்சுக்களும், யுத்தநிறுத்த உடன்பாடும் அவர்களது கண்காணிப்பும் தனித்துவமான பிரச்சினைகளை வெளிப்படுத்தினாலும் நீண்டகால இடைவெளிக்கு சர்வதேச சமூகமும் ஒரு காரணமாகும். இன்றும் யுத்தச் சூழலின் விளிம்புக்குள் இரு தலைவர்களும் பிரவேசித்தாலும், அதனை உடனடியாகத் தீவிரப்படுத்த முடியாதவர்களாகக் காணப்படுவதற்கு சர்வதேச சமூகமே காரணமாகும். அந்த வகையில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் போன்ற பிரதான சக்திகள் அரசுக்கு எதிராக முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்கான அரசியலைப் பரிசீலிப்போம்.

போர் விளிம்புக்குள் சென்றுகொண்டிருந்த இலங்கையின் போக்கைக் குறிப்பாக அரசாங்கத்தின் அணுகுமுறையை சாவதேச சக்திகள் கண்டித்துள்ளன. குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அணுகுமுறையில் ஜே.வி. பியின் போக்கைச் சர்வதேச சக்திகள் கண்டித்துள்ளதுடன் இந்நிலை தொடர்வது பொருளாதார அடிப்படையிலான சிக்கல்களை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் என்பதையும் அவர்களின், கூட்டான அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. ஒரு வகையில் கூறுவோமாயின், அரசாங்கத்தின் அணுகுமுறைகளை அதன் பங்காளிகள் மீது போடுவதன்மூலம் அரசாங்கத்தின் பிரதான பங்காளி தப்பிக் கொளள முயலுகின்றார் எனலாம். இதுவரை காலமும் ஆளும், எதிர்க் கட்சிகளுக்குள்ளேயே இந்தவகையான முரண்பாடு காணப்பட்ட நிலைமை மாறி, ஒரே அரசாங்கத்துக்குளளேயே ஆளும் கட்சிகளுககிடையே அத்தகைய முரண்பாடு வெளித் தோன்றியுள்ளது. தற்போது எதிர்க்கட்சி கணிசமான விட்டுக் கொடுப்புடன், வழமைக்கு மாறாக செயற்படும் போது அரசாங்கத்துக்குள்ளேயே இழுபறியின் வளர்ச்சிக் கட்டம் விரிவடைந்துவிட்டது.

இத்தகைய விடயமோ அல்லது இலங்கை பெரும்பான்மை ஆட்சியாளர்களது நிலைமையோ ஒன்றும் புதியதல்ல. பாதுகாப்பானதல்ல. இதே பாணியில் இலங்கையின் அரசியலை முரண்பாட்டுக்குள் தக்கவைத்த அரசியல் தலைவர்களின் போக்குகள் எவையும் சர்வதேச சமூகத்திற்கோ அல்லது இலங்கை மக்களுக்கோ புதியதல்ல. 1957 ஆம் ஆண்டில் இருந்து மிதவாத அரசியல் அணுகுமுறைக்கு கிடைத்த பதிலே, மீண்டும் ஆயுதப் போரில் ஈடுபட்ட மக்களின் மிதவாத அணுகுமுறைக்கு பெரும்பான்மைச் சமூகத்திற்குப் பதிலாக உள்ளது. இதனைப் புதியதென சர்வதேச சமூகம் கூறுவதே வேடிக்கையாக உள்ளது.

இன்றைய அரசியல் தேக்கத்திற்கு ஜே.வி.பி மட்டுமல்ல, ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சியும் அதன் அரசாங்கமுமே பொறுப்புடையது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை மாற்ற முயற்சிக்கப்பட்ட போதே, தற்போதைய தேக்கத்துக்கான அரசியலும் ஆரம்பித்துவிட்டது. ஜனாதிபதியின் ஜனநாயகவிரோத செயலுக்கு அதிகாரப் போட்டியெனக் கூறி அப்போதைய போக்கை நியாயப்படுத்திய சர்வதேச சக்திகள், தற்போதும் வெளிப்படையாக ஜனாதிபதியைக் கண்டிக்கவோ, தட்டிக்கேட்கவோ முடியாது ஜே.வி.பி மீது பாய்ந்துள்ளன. ஜே.வி.பிக்கு இன்னோர் தனித்துவமான முகமும் உண்டென்பதை கொடையாளி நாடுகள் புரிந்து வைத்துள்ளன. ஜே.வி.பி யின் உள்நாட்டு பொருளாதார அரசியல் கொள்கைகள் உதவி வழங்கும் நாடுகளுக்கு முற்றிலும் முரணான வேறுபட்ட கொள்கையாகும். அதுமட்டுமல்ல, ஜே.வி.பி கொண்டிருக்கும் இனவாதக் கொள்கை ஐக்கியப்பட்ட இலங்கைக்கு ஆபத்தானதென அவை கருதுகின்ற நிலை வளர்ந்துள்ளது. சர்வதேச சக்திகளும் இலங்கை, பிராந்திய அரசுகளும் உடையும் நிலையிலிருந்த இலங்கையை மீளவும் ஓட்டிவைத்திருக்கும் தந்திரமான அரசியல் நகர்வை மீளவும் உடைப்பதற்கு ஜே.வி.பி முயலுகின்றதென்பதே அந்தச் சக்திகளுக்கு ஆபத்தாகத் தென்படுகின்றது. அந்த நிலைக்காகவே ஜே.வி.பி யின் அணுகுமுறைகளைக் கண்டித்திருப்பதுடன் மீண்டும் ஆரம்பமாகவுள்ள யுத்தத்தைத் தடுத்து நிறுத்தலாமெனக் கருதுகின்றன.

தற்போதைய சமாதான முயற்சியானது சர்வதேசத்தினதும் பிராந்திய, இலங்கை அரசுகளின் கூட்டான பொறியாக இருந்தாலும், அதற்கூடாக வெளியே தென்படும் அரசியல் - பொருளாதார - பரிமாணமும் ஒன்றாக உள்ளது.

அத்தகைய பரிமாணத்தை தமிழ் மக்கள் எந்தளவுக்குப் புரிந்தார்களோ இல்லையோ அதற்கான இசைவாக்கங்களை வெளிப்படுத்தினார்கள். இதனால் பாதுகாப்பும்,அதற்கான அரசியலும் சர்வதேச சமூகத்திடம் இருந்து பெறவேண்டியதாக கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசியல் தலைமைகளும், பின்பற்றுகின்ற நகர்வுகள் சர்வதேச சமூகத்திற்கு அவசியமானதாகவும், சர்வதேச தரத்திற்கு ஏற்புடையதாகவுமே அமைந்திருந்தது. இதனால் சர்வதேச சக்திகள் போருக்கான அணுகுமுறைகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ள விரும்பின. அதன் வெளிப்பாடாகவே ஜே.வி.பி மீதான கண்டனம் அமைந்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்தின உரையை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலையைக் கருத்தில் கொண்டு சர்வதேச சமூகத்தின் நகர்வுகள் அமைந்துள்ளன. நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் கிளிநொச்சி விஜயத்துக்கு முன்பு ஜே.வி.பி தொடர்பாக வெளியான அறிக்கை உள்நோக்கங்களுடன் தயார் செய்யப்பட்டதேயாகும். போரை தவிர்ப்பதே முழு உலகத்தினதும் அவாவாகும். போரில்லாத சூழலில் விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பலவீனப்படுத்துவதுடன் அவர்களது கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை செறிவாக்கி ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் திணிப்பை ஏற்படுத்துவதே எல்லா அரசுகளதும் நோக்கம. அதனை சமாதானம் கணிசமாகவே சாத்தியப்படுத்துமென அவர்கள் கருதுகின்றனர். தமிழ் மக்கள் கருதுவதுபோன்று, எதிர்பார்ப்பது போன்று சமாதானத்தை சர்வதேச சக்திகளோ இலங்கை அரசாங்கமோ அணுகவில்லை, கருதவில்லை. ஒவ்வொரு அரசுகளது நிர்ணயிக்கப்பட்ட, அவர்கள் சார்ந்த நலன்களின் அடைவை மட்டுமே முதன்மையானதாக கொள்ளுகின்றன. அந்த வகையான நலன்கள் சாத்தியப்பாடுடையவையாக காணப்படும் சூழலை உருவாக்குவது அல்லது அதற்கான சூழலைத் தயார்படுத்துவது என்பதே சர்வதேச சக்திகளின் அணுகுமுறையாக உள்ளது.

எனவே இலங்கை அரசாங்கத்தின் இராணுவத் தயார்படுத்தல் வெளிப்படையான சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனேயே மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது. சமாதான காலத்தில் இலங்கை அரசாங்கம் கடற்படை, விமானப்படை, தரைப் படைக்கென பாரியளவான ஆயுதக் கொள்வனவை சர்வதேச சமூகத்திடமிருந்தே திரட்டியுள்ளது. போரைத் தயார்படுத்தும் மாதிரியில் இந்திய - இலங்கை கடற்படை ஒத்திகைகள் அமைந்திருக்கின்றன. எனவே இலங்கை அரசு ஒரு போருக்குத் தயாராகிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசைக் கண்டிக்காத சர்வதேசசமூகம் ஏன ஜே.வி.பியின் அணுகுமுறையைக் கண்டித்துள்ளனர் என்ற சந்தேகம் அவர்களது பக்கச்சார்பான செயற்பாட்டையே காட்டுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் முரண்பாடுகளுக்கான தீர்வுகள் பற்றி **Likelider** என்பவரது மாதிரியை நினைவுகூருவது தமிழ் மக்களின் மிதவாத அரசியல் அணுகுமுறைக்கு தெளிவான பதிலாக அமையும்.

1995 ஆம் ஆண்டு இலங்கை போன்ற, பிரச்சினைகளைக் கொண்ட நாடுகளுக்கான தீர்வுகளின் மாதிரிகள் பற்றி **Likelider** ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தார். ஏறக்குறைய 54 நாடுகளில் அவர் சேகரித்த தகவல்களைக் கொண்டு இராணுவரீதியான தீர்வுகளுக்கு பிந்திய நிலையையும், சமாதானப் பேச்சுக்கள் சார்ந்த தீர்வுகளுக்குப் பிந்திய நிலையையும் அளவீடு செயதுள்ளார். அவரது ஆய்வின் படி இராணுவரீதியில் தீர்வுகளை எட்டிய நாடுகளில் 85 சதவீதமான நாடுகளில் எந்தக் குழப்பமோ, நெருக்கடியோ ஏற்படாது, தீர்வுகள் நிரந்தரமானவையாக அமைந்திருந்தன. அதேபோன்று சமாதான பேச்சுவார்த்தைகளுக்கூடாக தீர்வுகள் எட்டப்பட்ட நாடுகளில் 34 சதவீதமானவை மட்டுமே எந்தக் குழப்பமும், முரண்பாடுமின்றி செயற்பட்டதையும் மீதி 66 சதவீதமான நாடுகளில் மீளவும் போர், முரண்பாடு என தீர்வுகளை எட்டப்பட்ட சக்திகள் நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளன.

எனவே இலங்கையில் தற்போது எழுந்துள்ள முரண்பாடு தீர்த்தலுக்கான வழிமுறைகள் பூரணமான, முழுமையான நம்பிக்கையை எந்தத் தரப்புக்கும் ஏற்படுத்தவில்லை. தமிழ் தரப்பை மீண்டும் ஏமாற்றுகின்ற பாணியிலான தீர்வும், தீர்வுக்கா தயார்படுத்தலுமே காணப்படுகின்றது. இதனால் சமாதான வழிமுறை எப்படி 1956 ஆம் ஆண்டுகளில் பொருத்தமில்லை என்றாகியதோ அவ்வாறே இன்றும் காணப்படுகின்றது. இதற்கான தயார்படுத்தலில் சர்வதேச சமூகம் ஈடுபடுகின்றது என்பதே புரிந்து கொள்ள வேண்டிய அரசியலாக உள்ளது. எல்லாசக்திகளும் ஆரோக்கியமான சமாதான வழிமுறையைப் பின்பற்றுதல் அவசியம். அந்த வகையிலான நிலையே மீளவும் போரைத் தவிர்க்கும்.

எனவே சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகள் அவர்கள் சார்ந்த அல்லது பிராந்தியம் சார்ந்த சக்திகளுடன் கொண்டிருக்கின்ற போட்டித் தன்மையின் வெளிப்பாடாக அமையலாம். கடற்படைப் பயிற்சிக்கு மாற்றீடான ஒன்றாகக் கூட ஜே.வி.பி மீதான கண்டனத்தைப் பார்க்கலாம். அவ்வாறு பார்ப்பது தவறானதுமல்ல. ஏனெனில் இலங்கை அரசியல், மேற்குஇந்தியா என்ற இழுபறிக்குள்ளும் சிக்கியுள்ளது. ஆனால் எல்லோருமே ஒரே இலக்கையே அடைய விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் தெரிவு செய்த பாதையோ வேறுபாடானவை. எல்லைகளும், அதி காரப்போட்டிகளுமே அவர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்துகின்றதேயன்றி, வேறு எந்த அடிப்படை முரண்பாட்டையும் அவை கொண்டிருக்கவில்லை.

எனவே அறிவியல் சார்ந்தநிலையில், சர்வதேசத்தையும் இலங்கை அரசின் போக்கையும் அளவீடு செய்வதுடன், சரியானவற்றை சரியாக அளவீடு செய்ய முயலுதல் வேண்டும். அறிவியல் சார்ந்த சமூகத்தின் மாறுதலே நிரதரமானதும் சாத்தியப்பாடானதுமான வளர்ச்சியை ஏற்படுத்தும்.

# அமெரிக்காவுக்கு எதிராகப் போராட ஈராக்கியர்களுக்கு சதாம் அழைப்பு!



(பாக்தாத்)

அமெரிக்காவுக்கு எதிராகப் போராட வருமாறு ஈராக்கியர்களுக்கு ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈராக்கில் இரு பிரிவு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்களில் 60 வீதமானோர் ஷியா பிரிவு முஸ்லிம்களாக இருந்தபோதும் அவர்களின் பிரதிநிதிகள் ஒரு போதும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது கிடையாது.

ஆட்சியைப் பறிகொடுத்த சதாம சுனி முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர். அவர் ஆட்சியை இழந்த நிலையில் அமெரிக்க ராணுவத்துக்கு எதிராக சிறுபான்மை சுனி முஸ்லிம்களே கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈராக்கில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்கள் கையில் ஆட்சி அதிகாரம் போய்விடும் என்று சுனி முஸ்லிம்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த நிலையில் ஈராக்கியர்கள் ஒற்றுமையாக இருந்து, அமெரிக்காவுக்கு எதிராகப் போராடவேண்டும் என்று சதாம் கேட்டுக்கொண்டிருப்பதாக அவரது சட்டத்தரணிகள் ஜோதான் நாட்டில் நிருபர்களிடம் கூறினார்.

மத அடிப்படையில் ஈராக்கை பிளவுபடுத்த அமெரிக்கா திட்டமிடுகிறது. மத இன வேறுபாடுகளை மறந்து ஈராக்கியர்கள் அமெரிக்காவை எதிர்க்க வேண்டும் என்று சதாம் கேட்டுக்கொண்டதாக அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

சதாமின் வழக்குகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக அவர் சிறையில் இருக்கும் சதாமை சந்தித்துப் பேசியபோதே, அவர் இந்த வேண்டுகோளை மக்களுக்கு தனது சார்பாக விடுவிக்கும்படி தெரிவித்ததாக சட்டத்தரணியின் செய்தித் தொடர்பாளர் ஜியாட் கசாவ்கே கூறினார்.

# பெரு நாட்டில் பஸ் விபத்து; 49 பயணிகள் உயிரிழப்பு!

பெருநாட்டின் வடபகுதியில் பயணிகள் பஸ் ஒன்று பாதையை விட்டுவிலகி, ஆற்றினுள் வீழ்ந்ததில் 49 பயணிகள் உயிரிழந்ததுடன், 15 பேர் படுகாயமடைந்தனர்.

பெரு நாட்டின் வடபகுதியில் உள்ள காட்டுப்பிரதேசத்தில் பாலம் ஒன்றின்மீது இந்தப் பேருந்து சென்று கொண்டிருந்தவேளையிலேயே இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றது.




பெருவில் தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் பலத்த மழையே இந்த விபத்து ஏற்படக் காரணம் என பஸ் கம்பனியின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் மலைப் பகுதியிலுள்ள வளைவுகளில் சாரதி பஸ்ஸை வேகமாகச் செலுத்திச் சென்றதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வாறான விபத்துக்கள் பெரு நாட்டில் அடிக்கடி இடம்பெறுவதாகவும் செய்திகள் தெரிவித்தன.

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையாலும், குறிப்பிட்ட பஸ் நசிவடைந்துள்ளமையாலும் உயிரழந்த உடல்களை மீட்பதில் மீட்புப் பணியாளர் பலத்த சவால்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானில் தலிபான்கள் தாக்குதல்: நான்கு பொலிஸார் உயிரிழந்தனர்!

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய திடீர் தாக்குதலில் நான்கு பொலிஸார் பலியாகினர்.

நேற்றுமுன்தினம் கந்தகார் அருகேயுள்ள மேவந்த் மாவட்டத்திலுள்ள சந்தைப் பகுதி அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது தலிபான்கள் திடீரென ரொக்கெட் தாக்குதல் நடத்தியதிலேயே பொலிஸாருக்கு இந்த உயிரிழப்பு ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலில் அமெரிக்க படையினர் இரண்டு பேரும் படுகாயமடைந்தனர். காயமடைந்த அமெரிக்க வீரர்கள் சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்திய தலிபான்கள் மீது படையினர் திருப்பித் தாக்கியதில் தலிபான் போராளி ஒருவர் உயிரிழந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜக்கிசான் ஏற்படுத்திய சாதனை!



சீனாவின் அதிரடி வீரர், ஆக்ஷன் ஹிரோ ஜாக்கி சான் ஜேர்மனியில் சாகச நிகழ்ச்சி ஒன்றை நடத்தி அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். நான்கு கொக்கிறீட் கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து அதை கராத்தே அடியால் உடைத்தார்.

உடைக்கும்போது தனது கைக்குள் கோழி முட்டையையும் வைத்திருந்தார். கொங்கிறீட் கற்களை உடைக்கவேண்டும். ஆனால், கையில் உள்ள முட்டை உடையக் கூடாது என்பதுதான் போட்டி.

ஜக்கிசான் கொங்கிறீட் கற்களை உடைத்தபோது முட்டை உடையவில்லை. ஜேர்மனியின் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக இந்தச் சாதனை நிகழ்ச்சியை அவர் நடத்திக் காட்டினார்.

# பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் ஈராக்கிற்கு திடீர் விஜயம்!

## பல தரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்தினார்



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆச்சரியப்படும் வகையில் ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு விஜயம் செய்துள்ளார். இவ்வாறு சென்ற அவர், ஈராக்கியத் தலைவர்கள் உட்பட பலருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பாக்தாத் விமான நிலையத்தைச் சென்றடைந்த பிளேயர், அங்கிருந்து உயர்பாதுகாப்பு வலய கிறீன்சூன் பகுதி நிர்வாக மையத்திற்கு ஹெலிகொப்ரர் மூலம் சென்றடைந்தார்.

பிரதமர் ரொனி பிளேயர் சாதாரண உடையணிந்து, குண்டு துளைக்காத அங்கி அணியாமல் சென்றபோதும் அவருடன் கூடச் சென்றவர்கள் குண்டு துளைக்காத அங்கியணிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குச் சென்ற பிளேயர், அங்கு இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி, அமெரிக்க - பிரிட்டன் அதிகாரிகள், ஈராக்கிய தேர்தல் ஆணையக அலுவல்ர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இங்கு உரையாற்றிய பிளேயர் தேர்தல் ஆணையக அலுவலர்கள் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் பணிபுரிவதாகவும் புதிய ஈராக்கில் அவர்கள் தான் வீரர்கள் எனவும் தெரிவித்தார்.

இதன்பின்னர், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பிளேயர்,

அடுத்த மாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலில் அனைத்து ஈராக்கியர்களும் பங்கெடுப்பார்களென நம்புகின்றேன்.

ஈராக்கில் உருவாகிவரும் ஜனநாயகத்தை தடுத்துநிறுத்துவதற்கு பயங்கரவாதிகளும், கிளர்ச்சிவாதிகளும், முயற்சி செய்து வருகின்றனர். இதனால் மக்கள் பெரும் அச்சநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி,

ஈராக்கில் வன்செயல்கள் நடந்தாலும், திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படும். ஈராக்கின் வரலாற்றிலேயே முதன்முறையாக ஜனநாயகம் ஏற்படுத்தப்படவுள்ளது. எமது இந்த நோக்கத்தைத் தடுத்துநிறுத்த எமது எதிரிகள் உறுதி பூண்டுள்ளனர். ஆனால் இதற்கு நாம் அனுமதியளிக்கமாட்டோம் எனத் தெரிவித்தார்.

இதனிடையே ஈராக்கின் சுனி முஸ்லிம்கள் வாழும் பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமெரிக்க விமானப்படை நடத்திய தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதுடன் 10 பேர் காயமடைந்தததாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இவற்றைவிட தியாலா மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகத்திற்கு தனது கடமைக்காகச் சென்ற அரச ஊழியர் ஒருவரை ஆயுததாரிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதேவேளை பிரிட்டன் பிரதமராக இருந்த வின்ஸ்ரன் சேர்ச்சில் ஈராக்கிற்கு விஜயம் செய்தபின்னர் தற்போதுதான் பிரிட்டன் பிரதமர் ஒருவர் ஈராக் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த அல்கொய்டா உறுப்பினர்கள் நால்வர் பாகிஸ்தான் பொலிஸாரால் கைது!




(கராச்சி)

அலகொய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர்கள் நான்கு பேரை கைதுசெய்துள்ளதால் பாகிஸதானில் இடம்பெறவிருந்த பல்வேறு தீவிரவாதத் தாக்குதல்கள் தவிர்க்கப்படடுள்ளதாக லாகூர் நகரப் பொலிஸார் தெரிவித்தனர்.

அல்கொய்டா உறுப்பினர்கள் சிலரைக் கைதுசெயய உதவுபவர்களுக்கு பல கோடி அமெரிக்க டொலர்கள் சன்மானமாக வழங்கப்படுமென பாகிஸ்தான் அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளதால் கடந்த வாரம் இவர்களுள் 4 பேரை பாகிஸ்தான் பொலிஸார் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட 4 தீவிரவாதிகளுள் அல்கொய்டா தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவரான அபு பராஜ் பிப்பியும் அடங்கியுள்ளார்.

இவருடன் இவரது சகாக்களும் பாகிஸ்தானில் தீவிரவாதத் தாக்குதலை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது தலைக்கு 2 கோடி அமெரிக்க டொலர்கள் சன்மானமாக வழங்கப்படுமென பாகிஸ்தான் பொலிஸார் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான மலிக் தெஷ்சின் பிப்பியின் வலதுகரமாகச் செயற்பட்டவர் என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை கொலை செய்வதற்கு இவர் இரண்டு தடவைகள் முயற்சித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரைக் கைதுசெய்ய உதவுபவர்களுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் சன்மானமாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஷியா இன முஸ்லிம் மதத் தலைவர் ஒருவரைக் கொலை செய்தமை தொடர்பாகவும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முஷாரப்பை கொலைசெய்ய முயற்சித்த மற்றுமொரு அல்கெய்டா தீவிரவாதியான அம்ஜாட் பாருக் பாகிஸ்தான் பொலிஸாருடனான மோதல் ஒன்றில் இறந்துவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பெனாசிரின் கணவர் சர்தாரி மீண்டும் கைதுசெய்யப்பட்டார்!





பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் கணவர் அசிவ் அலி சர்தாரி மீண்டும் பாகிஸ்தான் நீதிமன்றின் கட்டளைக்கமைய பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

கராச்சி நகரில் 1996 ஆண்டு நீதிபதி ஒருவரும் அவரது மகளும் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு ஒன்றுக்கு சமுகமளிக்கத் தவறியதாலேயே நீதிமன்றின் கட்டளைக்கு அமைய சர்தாரியைக் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்குத் தொடாபாக சர்தாரிக்கு வழங்கப்பட்ட பிணை நேற்று இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் வைத்து சர்தாரி கைது செய்யப்பட்டார்.

அரசியல் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக கராச்சியிலிருந்து இஸ்லாமாபாத்திற்கு வந்த சர்தாரியை வரவேற்பதற்காக இஸ்லாமாபாத் விமானநிலையத்தில் கூடியிருந்த ஆதரவாளர்கள், சர்தாரியை பொலிஸார் கைது செய்தவேளை பலத்த எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து பொலிஸார் குண்டாந்தடியடிப் பிரயோகம் மற்றும் கண்ணீர்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டு அவர்களை விரட்டியடித்தனர்.

கடந்த எட்டு வருடங்களாக சிறைவாசம் அனுபவித்த சர்தாரி கடந்த மாதமே நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட சர்தாரிக்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் ஆதரவை நிறுத்துவதற்காகவே பொலிஸார் சர்தாரியை கைது செய்திருக்கலாம் என பி.பி.சி நிருபர் தெரிவித்தார்.

தனது கைது விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள சர்தாரி -

எனது பிரபல்யத்தினை விரும்பாத அரசாங்கம் என்னைக் கைது செய்துள்ளது. இது சட்டத்திற்கு முரணான ஒன்றாகும் ஆனாலும் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள நான் தயாராகவே உள்ளேன் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ் – கஸ்தூரியார் வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியில் அனாதரவாகக் காணப்பட்ட சடலம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வண்ணார்பண்ணையை சேர்ந்த தர்மலிங்கம் சந்திரகுமார் (வயது -37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இறந்தவரின் முகப் பகுதியில் காயம் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான மரண விசாரணை இன்று யாழ்.போதனா வைத்தியசாலை பொலிஸ் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கதிரையில் இருந்த வேளை தவறி வீழ்ந்து மயக்கமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணிநேரத்தின் பின் உயிரிழந்தார்.

குருநகர் தண்ணீர்த் தாங்கியடியை சேர்ந்த எம்.நிக்ஷன் (வயது-29) என்பவரே உயிரிழந்தவர் என தெரியவருகிறது.

இறந்தவரின் சடலம் தொடர்பான மரணவிசாரணை இன்று யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

# இளைஞர், யுவதி கண்டியில் கைது!

(கண்டி)

கண்டியில் புதிய நீதிமன்ற கட்டடத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, பொலிஸாரின் தடைகளை மீறிச் செல்ல முற்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்று தெரிவித்ததாகவும், ஆயினும் அவரிடம் அதனை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் எவையும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஜனாதிபதி கலந்து கொண்ட மற்றுமொரு நிகழ்வு திகனவில் நடைபெற்ற போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக தமிழ் யுவதி ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் மது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்புக்கு...

யடிக்கும் அரசின் நோக்கிலேயே பட்டதாரி பயிற்சியாளர்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா -

பயிற்சியளிக்கப்பட்ட 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு வேலைக்கு சேரும் ஸ்தாபனங்களில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.

நாட்டை முன்னேற்றும் திட்டத்துக்கு ஆகக்கூடுதலான சேவைகளை வழங்க பட்டதாரிகள் முன்வரவேண்டும்.

அரசாங்கம் பெரும் எண்ணிக்கையிலான பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்குவது இதுவே முதற்தடவையாகும்.

அரச சேவையை வலுப்படுத்தி, திறமையாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

ஆண்டுதோறும் அரசாங்க ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

நாட்டின் முன்னேற்றப் பாதையில் அரச சேவை முதுகெலும்பாகத் திகழ்வது என்று கருதப்படுவதால் தற்போதைய அரசாங்கம் அதில் பூரண விசுவாசம் கொண்டிருக்கிறது.

இதனால் சகல அரச ஊழியர்களும் தகுந்த நோக்கத்துடன் திறமையாகச் செயற்படவேண்டும். எவ்வித அரசியல் சமூக பாரபட்சமின்றி வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படுகிறது.

சுயநல நோக்கங்கள் இல்லாமல் நாடு முழுவதும் பயனுறும் விதத்தில் பட்டதாரிகள் அடுத்த பத்து ஆண்டு காலத்துக்கு உழைப்பது அவசியம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜனவரியில்.....

கொழும்பு சென்ற அவர் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து நேற்றுமுன்தினம் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியைக் கையளித்து அருடன் இரண்டு மணிநேரம் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இதன்பின்னர் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு பேட்டியளித்த எரிக் சொல்ஹெய்ம் -

தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதென்பது தற்போது வரை சிக்கலானதாகவே உள்ளது.

ஆனாலும், இரண்டு தரப்பினரும் நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளமை ஆறுதலளிக்கக்கூடிய விடயமாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## எஸ்.பியை விடுவிக்குமாறு கோரி

# ஐக்கிய தேசியக் கட்சி நடத்தி வந்த பாதயாத்திரை கொழும்பில் முடிவு!





நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி ஐக்கிய தேசியக் கட்சியினரால் நடத்தப்பட்ட பாதயாத்திரை கொழும்பில் நேற்று முடிவடைந்தது.

கடந்த புதன்கிழமை ஹங்குரான்கெற்றவிலிருந்து புறப்பட்ட பேரணி நேற்று மாலை கொழும்பு ஹைட் பார்க்கில் முடிவடைந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொள்வதற்காக தலைநகர் கொழும்பில் 4 முனைகளிலிருந்து 4 ஆர்ப்பாட்டங்கள் புறப்பட்டு மேற்குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்துடன் இணைந்து கொண்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் சிவப்பு, நீலநிற சேலைகளினால் போர்க்கப்பட்ட நாய்களும் கொண்டுவரப்பட்டன.

வெலிக்கடை சிறைச்சாலை வீதி ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதைத் தடுக்கும் வகையில் நேற்றுக் காலை முதல் மாலை வரை இந்த வீதி பொதுமக்கள் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

வீதி மூடப்பட்ட இடங்களில் கலகம் அடக்கும் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பந்துல குணவர்த்தன, மஹிந்த விஜயசேகரா, கரு ஜெயசூரிய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் யோகராஜன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் ஆகியோர் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த திருமதி தாமரா திஸநாயக்க - சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதியாக்க எஸ்.பி. திஸநாயக்கா அரும்பாடுபட்டார். ஜனாதிபதி பதவியை சந்திரிகாவுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு எஸ்.பி.திஸநாயக்கா செயற்பட்டதைப் போன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தோ அல்லது பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்தோ எவரும் செயற்படவில்லை.

நாம் சந்திரிகா அம்மையாரிடம் உங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்தவர் யாரென வினாவினால் - அவர் உண்மை பேசினால் இது வெளிவரும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க -

இந்தப் போராட்டம் எஸ்.பி.திஸநாயக்காவை விடுதலை செய்வதற்காக மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. அந்தளவில் மாத்திரம் இது நிறுத்தப்படமாட்டாது. இந்த நாட்டின் மக்களை விடுதலை செய்யும் போராட்டத்தில் ஒரு அங்கமாகவே இதனைக் கருதுகின்றோம். எஸ்.பி.திஸநாயக்காவின் பின்னாற் சென்றவர் ஜனாதிபதி.

ஆனால் தற்போது அவரே இதனைத் தேடிக்கண்டுபிடித்து, சாட்சிகளை உருவாக்கி, அந்த ஒளி நாடாவினை 31 தடவைகள் ஒளிபரப்பியதன் பின்னர் தனக்குத் தெரிந்த மூன்று, நான்கு பேர்கள் ஊடாக இது குறித்து முறைப்பாடு செய்தார். உண்மையில் நீதிமன்றத்தை அவமதித்தது குற்றமாயின் நீதிபதிகள் இலஞ்சம் வாங்குவதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்து பாரிய குற்றமாகும். அப்படியானால் ஜனாதிபதியே முதலாவது குற்றவாளியாவார்.

நீதி மற்றும் சட்டத்துறைகளில் ஊழல்களும் ஒழுங்கீனங்களும் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்துத் தொடர்பாக முழுமையான விளக்கங்கள் வழங்கப்படல் வேண்டும். ஜனாதிபதி நீதி மற்றும் சட்டத்துறை எனப் பொதுமைப்படுத்திக் குற்றம் சாட்டுவ[illegible] விடுத்து அதனை யார் யார் செ[illegible] தார்கள் எனத் தெரிவிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் -

ஏற்கனவே நீதித்துறை லஞ்சமும் ஊழலும் மலிந்து காணப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனவே இங்கு நீதிமன்றினை அவமதித்தது எஸ்.பி.திஸநாயக்காவா அல்லது ஜனாதிபதியா என ஆராயப்படவேண்டும்.

இதேவேளை, அண்மைய காலங்களாக ஜனாதிபதி சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டு வருகின்றார். அதன் இரண்டாம் கட்டமே எஸ்.பியின் கைதாகும். ஏற்கனவே சர்வாதிகாரப் போக்கில் அமைச்சுப் பதவிகளைத் தனதாக்கிக் கொண்டார் எனத் தெரிவித்தார்.

## அமெரிக்க....

போது - குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்.

மறவன்புலோ, முகமாலை சோதனைச்சாவடி மற்றும் முன்னணிக் காவலரண்கள், யாழ்ப்பாண கோட்டை, வல்லிபுரம், பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்ததாகத் தெரியவருகிறது.

விமானமூலம் பலாலிக்கு வந்த இவர்களை யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் டி.எம்.டி.அல்விஸ் வரவேற்று குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

இது அமெரிக்க - இலங்கை இராணுவ நட்புறவு விஜயம் என்று இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## யுத்த முனைப்பைக் கைவிட்டு...

மீண்டும் இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் யுத்தத்தின் மூலம் இலங்கையிலுள்ள மக்கள் பாரிய இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். நீண்டகால யுத்தத்தின் மூலம் மக்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளனர்.

பல இலட்சம் மக்கள் தொடர்ந்து யுத்தத்தினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர். யுத்தநிறுத்த உடன்படிக்கை மதிக்கப்படல் வேண்டும்.

பேச்சுவார்த்தை மேசைக்கு இரண்டு தரப்பினரும் வரவேண்டும். சமாதான ஏற்பாட்டாளர்களாகத் தொடர்ந்தும் நோர்வே சேவையாற்றும்.

இலங்கையிலுள்ள மக்கள் அனைவரும் சமாதானத்துடன் வாழ வேண்டும். யுத்தத்தால் அழிவுற்ற பிரதேசங்கள் புனரமைக்கப்படல் வேண்டும். யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டாம். யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. பேச்சுக்களின் மூலமே தீர்வை எட்டமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

2004 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

Diploma in Visualize Management

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS WORD, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.



காலம் 3 மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம் 29.12.2004

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811

மாபெரும் மலிவு விற்பனை



T.V. (14"-29"), Sony, Panasonic Video deck மற்றும் F.H Model மற்றும் Pioneer, Kenwood செற்அப் ரேடியோ மற்றும் Amplifier என்பன விற்பனைக்குண்டு.



சண் மல்ரி ரேட் சென்ரர்
150, K.K.S. Road, Jaffna.

இம்மாதம் 20ஆம் திகதி முதல் 31 வரை

(C/3502)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.